ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1779/13 - 2012 ඔක්තෝබර් මස 10 වැනි බදාදා - 2012.10.10

*1779/13 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, மேல் மாகாண வர்த்தக கூட்டுத்தாபன மற்றும் கூட்டுத்தாபனமாக்கப்படாத, வர்த்தக நிலையங்களின் வியாபாரப் பெயர் பதிவு நியதிச் சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2012.03.09 ஆந் திகதிய 1748/15 ஆம் இலக்க, வர்த்தமான பத்திரிகையின் மூலமாக வெளியிடப்பட்டு, இங்கு கீழே காட்டப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள 2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, மேல் மாகாண வர்த்தக கூட்டுத்தாபன மற்றும் கூட்டுத்தாபனமாக்கப்படாத, வர்த்தக நிலையங்களின் வியாபாரப் பெயர் பதிவு நியதிச் சட்டம் அமுலுக்கு வரும் தினம் 2012, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதியாக இருக்க வேண்டும் என மேல் மாகாண மாகாண சபையின் முதலமைச்சரும் நிதி, திட்டமிடல், நீதி, ஒழுங்கு, காணி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கல்வி, மின்சக்தி, மின்வலு தொழிற்துறை, பொருளாதார மேம்பாட்டு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க ஆகிய நான் இத்தால் அறிவிக்கின்றேன்.*

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், நீதி, ஒழுங்கு, காணி,
உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கல்வி, மின்சக்தி, மின்வலு
தொழிற்துறை, பொருளாதார மேம்பாட்டு அமைச்சர்,
மேல் மாகாண மாகாண சபை.

மேல் மாகாண முதலமைச்சர் காரியாலயம்,
சீராவஸ்தி மந்திர,
கொழும்பு 7,
2012, ஒற்றோபர் 9.

**2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க மேல் மாகாண வியாபாரப் பெயர்கள் தொடர்பான நியதிச் சட்டம்**

மேல் மாகாணத்தினுள் வியாபார பெயர்களின் கீழ் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்லும் வியாபார ஸ்தாபனங்களையும் ஆட்களையும் பதிவு செய்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் அவ்வாறு பதிவு செய்வதோடு தொடர்புடைய இடைநேர் விளைவான எல்லா விடயங்களையும் மேற்கொள்வதற்குரிய நியதிச் சட்டம் ஒன்றாகும். 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க மேல் மாகாணத்தின் வியாபாரப் பெயர் தொடர்பான நியதிச் சட்டம் இங்கு இல்லாது ஒழிக்கப்படுகிறது. இந்த நியதிச் சட்டம் 1918 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க 1919 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க, 1938 ஆம் ஆண்டு 8 ஆம் இலக்க கட்டளைச் சட்டங்களால் திருத்தப்பட்ட வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டத்திற்கு (149 ஆம் அத்தியாயத்திற்கு) இயைபற்றாதாகும்.

இந்நியதிச் சட்டத்தின்கீழ் மேல் மாகாணத்திற்கு உட்பட்ட நோக்கத்தினைக் கொண்ட வியாபாரக் கூட்டுத்தாபனம் அத்துடன் கூட்டுத்தாபனமாக்கப்படாத வியாபாரத் தாபனமே வியாபாரப் பெயர் ஒன்றாக பதிவு செய்யப்பட வேண்டும்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இந்த நியதிச் சட்டம் 2011 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்,க மேல் மாகாண வியாபார கூட்டுத்தாபனம் அத்துடன் கூட்டுத்தாபனமாக்கப்படாத தாபனங்களின் வியாபாரப் பெயர்கள் நியதிச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் மேல் மாகாண ஆளுநரினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட பின் அமைச்சரினால் (இதனகத்துப்பின் குறித்த தினமாக அழைக்கப்படும்) வர்த்தமானி பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**1 ஆம் பிரிவு**

வியாபார பெயர்களைப் பதிவு செய்தல்

வியாபார தாபனங்கள் மற்றும் ஆட்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது.

2.(அ) மேல் மாகாண மாகாண சபையினுள் (இதனகத்துப்பின் ''மாகாண சபை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) வியாபார நிலையமொன்றை கொண்டு உள்ள ஆட்கள், எல்லா ஆட்களுமான பங்காளிகள் உண்மையான முழு பெயர்களைக் கொண்டு இராத வியாபாரப் பெயர்களின் கீழ் வியாபாரங்களை மேற்கொண்டு செல்லும் எல்லா வியாபார தாபனங்கள் ஒன்றும் ;

(ஆ)மாகாண சபையினுள் வியாபார நிலையமொன்றுள்ள மற்றும் தமது பெயரின் கீழ் வியாபாரத்தைக் கொண்டிராது வியாபார பெயர் ஒன்றின் கீழ் வியாபாரத்தை மேற்கொண்டு செல்லும் எல்லா ஆட்களும் ;

(இ)மாகாண சபையினுள் வியாபார நிலையமொன்று காணப்படும் , பெண் ஒருவர் தொடர்புபடுமிடத்து திருமணத்தின் காரணமாக பெயரில் மாற்றம் ஏற்பட்ட சந்தர்ப்பம் ஒன்றினைத் தவிர இந்நியதிச்சட்டம் நிறைவேற்றப்பட்ட முன் அல்லது பின் தமது பெயரினை மாற்றி இருந்த ஒவ்வொரு ஆளும் அல்லது வியாபார தாபனம் ஒன்றாயின் பெயரினை மாற்றிய அங்கத்தவர் ஒருவரைக் கொண்ட ஒவ்வொரு வியாபார தாபனம் ஒன்றும் ; அத்துடன்;

(ஈ) மாகாண சபையினுள் வியாபார தாபனம் ஒன்று காணப்படும் மற்றும் ஏதாவது சேர்ப்பு நடவடிக்கை ஒன்று இல்லாது தனது உண்மையான கூட்டுத்தாபன பெயரினைக் கொண்டிராத வியாபார பெயரில் வியாபாரம் ஒன்றினை நடாத்தும் ஒவ்வொரு கூட்டுத்தாபனம் ஒன்றும் ;

இந்த நியதிச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த நியதிச் சட்டத்தில் பணிக்கப்பட்டுள்ளதைப் போன்று பதிவு செய்யப்பட வேண்டும்.

பதிவு செய்யப்படுவது அவசியமற்ற சந்தர்ப்பங்கள்.

3. (i) வியாபாரத்தினை நடாத்துவது அதன் முன் உரிமையாளருக்கு பதிலாகவே எனத் தெரியவரும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு பெயர் சேகரிக்கப்படுவதினால் மட்டும் ; அல்லது

(ii) நட்டம் அடைந்ததினால் கையளிப்பாளர் ஒருவரினால் அல்லது ஏதாவது ஒரு நீதிமன்றம் ஒன்றினால் நியமிக்கப்பட்ட பெறுகையாளர் ஒருவர் அல்லது முகாமையாளர் ஒருவர் அல்லது பொறுப்பாளர் ஒருவரினால் வியாபாரம் அவ்வாறு நடாத்தப்பட்டுச் செல்லும் சந்தர்ப்பத்தில் ; அல்லது

(iii) இரு ஆட்கள் அல்லது அதைவிடக் கூடிய எண்ணிக்கையினரினால் நடாத்தப்படும் சொத்து கொள்வனவு செய்தவொன்று அல்லது வேறு ஒரு கையேற்றல் அதை விற்பதனால் கிடைக்கும் ஏதாவது ஒரு இலாபம் உரிமையாளருக்கு இடையே பகிரப்பட்டால், பகிரப்படாவிட்டால், அப்பெயரில் வியாபாரமொன்றை நடாத்திச் செல்லும் சந்தர்ப்பமொன்றில் பதிவு செய்யப்படுவது தேவையாகாது.

உள்நாட்டு முகாமையாளரினால் நடாத்தப்படும் வியாபாரம்.

4.(1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதற்கு உரிய ஏதாவது ஆள் ஒருவர் அல்லது ஏதாவது வியாபார தாபனம் ஒன்றின் எல்லா பங்காளிகள் அல்லது ஏதாவது ஒரு கூட்டுத்தாபனம் ஒன்றின் எல்லாப் பணிப்பாளர்கள் மற்றும் செயலாளர் இலங்கைக்கு வெளியில் வசிக்கும் சந்தர்ப்பத்தில் அந்த ஆளின் வியாபாரத் தாபனத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் வியாபாரம் அந்த ஆளினது அல்லது வியாபார தாபனத்தினது அல்லது கூட்டுத்தாபனத்தின் பெயரில் உள்நாட்டு முகாமையாளர் ஒருவரினால் மாகாண சபையினுள் நடாத்திச் செல்லப்பட வேண்டும். மேலும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் அந்த ஆள், வியாபார தாபனம் அல்லது கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ள வேண்டிய எல்லா பொறுப்புக்களையும் மேற்கொள்வது தொடர்பாக அந்த உள்நாட்டு முகாமையாளர் தனிப்பட்ட ரீதியில் பொறுப்புச் சொல்ல வேண்டும்.

(2) ஏதாவது வியாபாரம் ஒன்றுக்காக (1) ஆவது உட்பிரிவுக்கு இணங்க உள்நாட்டு முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்படவில்லை என பதிவாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ள வேளையில், அந்த உட்பிரிவில் பணிப்புக்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்குமாறு, அந்த ஆளுக்கு அல்லது வியாபார தாபத்தின் பங்காளிகளுக்கு அல்லது அக்கூட்டுத்தாபனத்தின் எல்லா பணிப்பாளர்களுக்கும் மற்றும் செயலாளருக்கும் பதிவாளரினால் அறிவிக்கப்படலாம்.

(3) அவ் அறிவிப்பு அறிவிக்கப்பட்டு மூன்று மாத காலத்தினுள் அவ் அறிவிப்புக்கு இணங்கச் செயற்படுவது தவணை தவறுமிடத்து வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அறிவிப்பு ஒன்றின் ஊடாக அவ் ஆளினது வியாபார தாபனத்தின், கூட்டுத்தாபனத்தின் பதிவு பதிவாளரினால் அகற்றப்பட வேண்டும்.

(4) (1) ஆவது உட்பிரிவின் கீழ் உள்நாட்டு முகாமையாளரினால் ஏதாவது பொறுப்பு ஒன்று தவணை தவறும் சந்தர்ப்பம் ஒன்றில் அவர் அந்த வியாபார தாபனத்தை மேற்கொண்டு செல்வது ஏதாவது ஒரு ஆளொருவரின் பெயரில் ஆயின், அவ் ஆள் அல்லது வியாபார தாபனத்தின் பங்காளி ஒருவர் அல்லது கூட்டுத்தானத்தின் பணிப்பாளர் ஒருவர் அல்லது செயலாளர் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப உட்படவேண்டிய பொறுப்புக்களுக்கும், தண்டனைகளுக்கும் அவர் உட்பட்டாக வேண்டும். மேலும் இந்த நியதிச் சட்டத்தின் தண்டனைகள் அத்துடன் ஏனைய ஏற்பாடுகள் அதற்கு இணங்க, தெரிந்திருக்க வேண்டும்.

(5) இந்தப் பிரிவின் காரியங்களுக்காக "வெளிநாட்டு முகாமையாளர்" ஆக வெளிநாட்டில் வசிக்கும் மற்றும் மாகாணத்திற்குரிய ஏதாவது வியாபார தாபனம் ஒன்று அல்லது ஆள் ஒருவர் எழுத்துமூலமாக நியமிக்கப்பட்ட அல்லது அற்றோனியட் அதிகாரத்தின் கீழ் செயற்படும் ஆள் ஒருவர் அல்லது வியாபாரத்தினை மேற்கொண்டு செல்லும் காசோலையைக் கையொப்பம் இடும் அல்லது உரிய முகாமையாளராகச் செயற்படும் ஏதாவது ஆள் ஒருவர் உள்ளடங்குகின்றார். அதன் உள்நாட்டு முகாமையாளர் இலங்கை பிரஜை ஒருவர் அத்துடன் இலங்கையில் வசிக்கும் ஒருவராக வேண்டும். இந்த நியதிச் சட்டத்தின் கீழ் அந்த ஆள் அல்லது வியாபாரத் தாபனம் அல்லது கூட்டுத்தாபனம் நிறைவேற்ற இணங்கி உள்ள எல்லா பொறுப்புக்களையும் மேற்கொள்வது தொடர்பாக அதன் உள்நாட்டு முகாமையாளர் தனிப்பட்ட ரீதியில் பொறுப்புச் சொல்ல வேண்டும்.

5. (1) இந் நியதிச் சட்டத்தின் கீழ் மேல் மாகாண சபையினுள் பதிவு செய்யப்பட உள்ள ஒவ்வொரு வியாபார தாபனம் ஒன்றினாலும் அல்லது ஆள் ஒவ்வொருவரினாலும் அவ் வியாபார தாபனத்தின் அல்லது அந்த ஆளின் பிரதான வியாபார நிலையம் அமைந்துள்ள பதிவாளரின் காரியாலயத்திற்கு, தபாலில் அனுப்பி அல்லது கொண்டுவந்து ஒப்படைத்து, பின்வரும் விவரங்களை உள்ளடக்கி, உரிய படிவத்தில் எழுத்துமூலமான தகவல் ஒன்றினை வழங்க வேண்டும். பதிவு செய்யும் விவரங்கள்.

(அ) வியாபாரம் நடாத்தப்படுவது ஏதாவது வியாபார பெயரொன்றின் கீழேயாயின், அந்த வியாபாரத்தின் பெயர் ;

(ஆ) வியாபாரத்தின் தன்மை ;

(இ) பிரதான வியாபார நிலையத்தின் முகவரி ;

(ஈ) வியாபார விடயங்களுக்காக ஏதாவது ஒரு கிளை காரியாலயம் ஒன்று, களஞ்சியம் ஒன்று குதம் ஒன்று அல்லது பொருட்களஞ்சியத் தொகுதி ஒன்று பேணிச் செல்லப்பட்டால் அவ் இடங்களின் முகவரிகள் ;

(உ) வியாபாரம் ஆரம்பமாகிய திகதி ;

(ஊ) ஆள் ஒருவரினால் அல்லது (ஏதாவது ஒரு பங்காளி ஒருவர் கூட்டுத்தாபனம் ஒன்று அல்லாத) வியாபார தாபனம் ஒன்றின் பங்காளியினால் அல்லது வியாபாரம் செய்யப்படும் சந்தர்ப்பம் ஒன்றில் அவ் ஆளினது அல்லது அவ்வாறான ஒவ்வொரு பங்காளியினதும் கீழே காணப்படும் விபரங்கள் :-

(i) தற்போது உபயோகிக்கப்படும் முழுப் பெயர் :----.
(ii) முன்னர் ஏதாவது பெயர் ஒன்று இருந்திருந்தால் அம் முழுப் பெயர் :----.
(iii) குடியுரிமை :----.
(iv) தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
(v) பொதுவாக வசிக்கும் இடம் :----.
(vi) அவர், உரிமையாளரான அல்லது பங்காளியான வேறு எல்லா வியாபாரங்களினதும் பெயர் மற்றும் பதிவு செய்த இலக்கங்கள் :
(vii) அவர் பணிப்பாளர் ஒருவராக உள்ள எல்லாக் கூட்டுத்தாபனத்தினதும் பெயர்கள் மற்றும் பதிவு இலக்கங்கள் :----.
(viii) வேறு ஏதாவது ஒரு வியாபாரம் ஒன்றின் தொழில் தன்மை :----.

(எ) கூட்டுத்தாபனம் ஒன்றினால் அல்லது எல்லாப் பங்காளிகளினதும் கூட்டுத்தாபனமான வியாபார தாபனம் ஒன்றினால் வியாபாரத்தினை நடாத்திச் செல்லும் சந்தர்ப்பம் ஒன்றில், அவ்வொவ்வொரு கூட்டுத்தாபனங்கள் தொடர்பான கீழே காணப்படும் விவரங்கள் :-

(i) கூட்டுத்தாபனத்தின் பெயர் :----.
(ii) கூட்டுத்தாபனம் ஏதாவது ஒரு சட்டமொன்றின் கீழ் உருவாக்கப்பட்டதாயின் அந்தச் சட்டம் :----.
(iii) கூட்டுத்தாபனம் ஆக்கப்பட்ட பதிவு இலக்கம் ஒன்று காணப்பட்டால் அவ் இலக்கம் :----.
(iv) பதிவு செய்யப்பட்ட அல்லது பிரதான காரியாலயத்தின் முகவரி :----.
(v) அமைச்சரினால் வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அறிவித்தல் ஒன்றின்மூலம் பணிக்கப்படக்கூடிய வேறு விவரங்கள் :----.

(ஏ) வேறு ஏதாவது வியாபார பெயர் ஒன்றின் கீழ் வியாபாரம் நடாத்தப்பட்டால் அந்த வேறு வியாபாரத்தின் பெயர் ;

(ஐ) வியாபாரம் ஒன்றினை மேற்கொண்டு செல்ல ஆரம்பிக்கும் ஒவ்வொரு ஆளும் மற்றும் தாபனம் ஒன்றும் உரிய படிவத்தில் விண்ணப்பத்தை பூரணப்படுத்தி அவ் வியாபாரம் ஆரம்பிக்கும் தினத்தில் இருந்து 14 நாட்களுக்குள் அல்லது பதிவாளரினால் இடமளிக்கப்படும் கால எல்லை ஒன்றினுள் சமர்ப்பிக்க வேண்டும் ;

அவ் விண்ணப்பப்படிவம் -

(i) ஆள் ஒருவர் தொடர்பான விடத்து, அவரினாலும் ;

(ii) கூட்டுத்தாபனம் ஒன்று சம்பந்தமான இடத்து அதன் இரு பணிப்பாளர்கள் அல்லது பணிப்பாளர் மற்றும் செயலாளரினாலும் ;

(iii) வியாபாரத் தாபனம் ஒன்று சம்பந்தமாகும் இடத்து எல்லா பங்காளிகளாலும் கையொப்பம் இடப்பட வேண்டும் .

(2) (1) ஆவது உட்பிரிவின் (அ) பந்தியின் கீழ் வழங்கப்பட்ட வியாபார பெயரில் சொல் மொழிபெயர்ப்பு ஒன்று இல்லாத வியாபார பெயர் ஒன்று அல்லது அதைவிடக்கூடிய வியாபாரம் ஒன்றினை மேற்கொண்டு செல்லும் சந்தர்ப்பத்தில், (1) உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளபடி அந்த ஒவ்வொரு வியாபாரங்கள் தொடர்பாகவும் வேறாக தகவல் ஒன்று வழங்கப்பட வேண்டும்.

*முன்னர் பதிவு செய்யப்பட்டு இருந்த போதும் நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் தினத்திற்கு பின் வழங்க வேண்டிய தகவல் கள்.*

6. (1) இந் நியதிச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் தினத்திற்கு முன் ஏதாவது ஒரு வியாபார பெயர் ஒன்றின் கீழ் வியாபாரம் ஒன்றினை மேற்கொண்டு சென்ற எல்லா வியாபார தாபனம் ஒன்று அல்லது ஆள் ஒருவர் இந் நியதிச் சட்டத்தின் கீழும் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்பட வேண்டும். எவ்வாறான போதும் இந் நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் தினத்திற்கு பின்னர் மேற்கொள்ளப்படும் மாற்றம் ஒன்று அல்லது இரத்துச் செய்தல் ஒன்று இந்த நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும்.

*புதிய வியாபாரம் ஒன்றை ஆரம்பித் தல் அல்லது வியாபார பெய ரினை மாற்றல்.*

7. (1) குறித்த தினம் அல்லது அதன் பின் வியாபார பெயரின் கீழ் வியாபாரம் ஒன்றினை நடாத்திச் செல்ல தொடங்கப்பட்ட அல்லது அத்தினத்திற்கு பின் வேறு ஏதாவது ஒரு காரணம் ஒன்றினால் பதிவு செய்வதற்கு உட்படும் எல்லா வியாபார தாபனம் ஒன்று அல்லது ஆள் ஒருவரினால் 5 ஆவது பிரிவின் கீழ் பணிக்கப்பட்ட விவரங்கள் தொடர்பான தகவல் ஒன்று இரு பிரதிகளுடன் வழங்கப்பட வேண்டும்.

(2) (1) ஆவது உட் பிரிவின் கீழ் வழங்க வேண்டும் என பணிக்கப்பட்டுள்ள விவரங்கள் தொடர்பான தகவல்கள் உரிய படிவத்தில் இடம்பெற வேண்டியதுடன் அது ஆரம்பிக்கும் தினத்தில் இருந்து பதினாலு நாட்களுக்குள் அல்லது அந்தப் பொறுப்பு ஏற்பட்ட தினம் அல்லது வேண்டுகோள் ஒன்றின் கீழ் பதிவாளரினால் இடமளிக்கப்படும் மேலதிக கால எல்லை ஒன்றிலோ வழங்கப்பட வேண்டும்.

(3) (1) ஆவது உட்பிரிவின் கீழ் கீழேயான விவரங்கள் தொடர்பான தகவல்கள் :

(அ) ஆள் ஒருவர் தொடர்பானவிடத்து அவரினாலும் ;

(ஆ) கூட்டுத்தாபனம் ஒன்று தொடர்புபடும் இடத்து இரண்டு பணிப்பாளர்களினாலும் அல்லது அதன் பணிப்பாளர் ஒருவரும் மற்றும் செயலாளரினாலும்,

மேலும்,

(இ) வியாபார தாபனம், ஒன்றாகுமிடத்து எல்லா பங்காளிகளினாலும் கையொப்பமிடப்பட வேண்டும்.

*தடை செய்யப் பட்ட வியாபார பெயர்.*

8. (1) (அ) (i) ''சனாதிபதி அவர்கள்'' ,''சனாதிபதி'', ''தேசிய'', ''அரச'' அல்லது ''இலங்கை'' என்ற சொற்கள் அல்லது பதிவாளரினது கருத்துக்கு இணங்க சனாபதியின் அனுசரணை இல்லாவிடின் அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்தின் ஏதாவது ஒரு திணைக்களம் ஒன்றுடன் ஏதாவது தொடர்பு ஒன்றை வெளிக்காட்டும் அல்லது வெளிக்காட்ட இடமுள்ள சொற்கள் ;

(ii) ''நாகரீக'' அல்லது ''கூட்டுத்தாபனப்படுத்தப்பட்ட'' அல்லது ''கம்பனிகள்'' என்ற சொற்கள் அல்லது அவற்றின் கருத்துக்களுக்காகப் பயன்படுத்தும் சொற்கள் இல்லாவிடின் பதிவாளரின் எண்ணத்திற்கு இணங்க ஏதாவது ஒரு மாநகர சபை ஒன்றிக்கு அல்லது ஏதாவது வேறு ஏதாவது உள்ளூராட்சி தாபனம் ஒன்றிற்கு அல்லது பாராளுமன்ற சட்டம் ஒன்றினால் அல்லது வேறுவகையில் கூட்டுத்தாபனமாக்கப்பட்ட ஏதாவது ஒரு சங்கம் ஒன்றிற்கு அல்லது சபை ஒன்றின் தொடர்பு ஒன்றினை வெளிப்படுத்தும் அல்லது வெளிப்படுத்த இடமுள்ள சொற்கள் ; அல்லது

(iii) ''கூட்டுறவு'', ''கூட்டுத்தாபனம்'' அல்லது ''சங்கம்'' என்ற சொற்கள் உள்ளடக்கப்பட்டுள்ள வியாபார பெயர் ஒன்றின் கீழ் ;

(ஆ) வியாபார பெயர் ஒன்றின் தன்மையினை காரணமாகக் கொண்டு அல்லது அதனை உபயோகத்திற்கு எடுக்கும் முறையைக் காரணமாகக் கொண்டு அது நாகரீகத்திற்கு அல்லது மக்கள் அமைதிக்கு முரண்பாடாயின் அத்துடன் இதனால் ஏதாவது ஒரு இனத்தின், சமய அல்லது வர்க்கத்திற்கு பாதிப்பு ஒன்றை ஏற்படுத்த இடமுண்டாயின் அல்லது அந்தப் பெயரில் அழைக்கப்படும் வாணிபம் அல்லது வியாபாரத்தின் தன்மை தொடர்பாக வர்த்தக அல்லது வியாபார குழுக்கள் அல்லது மக்களை திசை திருப்ப இடமுண்டாயின் அந்த வியாபாரப் பெயரின் கீழ் ;

(இ) அவ்வாறான வியாபாரத்தின் பெயர் ஒன்றுக்கு மாற்றப்படும் வியாபார பெயர் ஒன்றின் கீழ் ;

ஏதாவது வியாபார தாபனம் ஒன்று அல்லது ஆள் ஒருவர் அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றினால் மாகாண சபையினுள் வியாபாரம் ஒன்று நடாத்திச் செல்லப்படக்கூடாது.

*விபரத் தகவல் களை மாற்றுதல்.*

9. (1) ஏதாவது ஒரு வியாபார தாபனம் ஒன்று அல்லது ஆள் ஒருவர் தொடர்பாக பதிவு செய்யப்பட்டுள்ள ஏதாவது விவரங்களில் மாற்றம் ஒன்றினைச் செய்யும் அல்லது ஏற்படும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில், அவ் மாற்றத்தின் தன்மையும் மற்றும் திகதியையும் குறிப்பிட்டு மாற்றங்களுக்கு உரிய தகவல் ஒன்று, இறுதியாக வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் அல்லது அதன் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றுடன், அந்த வியாபார தாபனம் அல்லது ஆளினால் வழங்கப்பட வேண்டும்.

(2) (1) உட்பிரிவின் கீழேயான விவரங்கள் தொடர்பான, தகவல் உரிய படிவத்தில் இடம்பெற வேண்டியதுடன், அம் மாற்றம் செய்யப்பட்ட தினத்தில் இருந்து பதினான்கு நாட்களுக்குள் அல்லது பதிவாளரினால் இடமளிக்கப்படும் மேலதிக கால எல்லையினுள் வழங்க வேண்டும்.

(அ) ஆள் ஒருவர் தொடர்புபடுமிடத்து, அவரினால் கையொப்பம் இடப்பட வேண்டும் ;

(ஆ) கூட்டுத்தாபனம் ஒன்று தொடர்புபடுமிடத்து இரண்டு பணிப்பாளர்கள் அல்லது அதன் பணிப்பாளர் ஒருவர் மற்றும் செயலாளரினால் கையொப்பம் இடப்பட வேண்டும். மேலும் ,

(இ) வியாபார தாபனம் ஒன்று தொடர்புபடுமிடத்து, எல்லாப் பங்காளிகளாலும் அல்லது ஒரு பங்காளியாலும் கையொப்பமிடப்பட வேண்டும். பங்காளி ஒருவரினால் கையொப்பமிடப்படும் வேளையில், அதில் இடம்பெறும் சத்தியக் கடதாசி, அப்பங்காளியினால் கையொப்பம் இடப்பட்டு சமாதான நீதவான் ஒருவர் அல்லது சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(3) வியாபார தாபனத்துக்கு புதிய பங்காளி ஒருவர் சேர்வதினால் விவரங்களில் ஏதாவது மாற்றம் ஒன்று ஏற்படும் வேளையில் (1) முதலாவது உட்பிரிவின் கீழேயான தகவலில் அப்புதிய பங்காளி உள்ளடங்கலாக, ஒவ்வொரு பங்காளிகளாலும் கையொப்பம் இடப்பட வேண்டும்.

(4) ஏதாவது ஆள் ஒருவர் வியாபார தாபனத்தில் பங்காளியாக இருந்து இல்லாமல் போவதனால் விவரங்களில் மாற்றம் ஒன்று ஏற்படும் வேளையில், (1) ஆவது உட்பிரிவின் கீழேயான மாற்றங்களுக்கு உரிய தகவல்:-

(அ) தொடர்ந்தும் இருக்கும் ஒவ்வொரு பங்காளிகளாலும் மற்றும் பங்காளியாக இருந்து விலகியவரினாலும் ; அல்லது

(ஆ) உரிய முறையில் சத்தியக் கடதாசி ஒன்றின் மூலம் ஒவ்வொரு கையொபம் இடுபவர்களினாலும் நிரூபிக்கப்படுவதன் கீழ், தொடர்ந்தும் இருக்கும் ஒவ்வொரு பங்காளிகளினாலும் கையொப்பம் இடப்பட வேண்டும்.

(5) இந்தப் பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதாவது ஒரு தகவல் ஒன்றை நிரூபிப்பவர் தகவலாளரைத் தவிர வேறு ஏதாவது ஆள் ஒருவர் பங்காளி ஒருவர் ஆகிறார் என அல்லது அவ் ஆள் பங்காளியாக இருப்பது முடிவடைந்துள்ளது எனக் குறிப்பிடும் அல்லது ஏதாவது ஆள் ஒருவர் பங்காளி ஒருவராக உள்ளார் என அல்லது பங்காளி ஒருவராக இருப்பது முடிவடைந்துள்ளது எனக் குறிப்பிடப்படாத ஏதாவது ஒரு சத்திய கடதாசி ஒன்று, பங்காளி ஒருவராக அந்த வேறு ஆளுக்கு பொறுப்பு அல்லது பொறுப்பில் இருந்து விடுபடுவது தொடர்பாக, அந்த வேறு ஆளுக்கு சார்பாக அல்லது எதிராக சமர்ப்பிக்கப்படக்கூடிய சாட்சிகள் இருக்கக் கூடாது.

(6) எல்லாப் பங்காளிகளும் ஒரே முறையில் பங்காளிகளாக இருப்பது நிறைவடைவது மற்றும் வியாபார நடவடிக்கையினைத் தொடர்ந்து மேற்கொண்டு செல்வதற்கு ஏற்ற வகையில் புதிய பங்காளிகளைச் சேர்த்துக் கொள்வது இப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களில் மாற்றங்களை ஏற்படுத்த உட்படக்கூடாது.

(7) சத்தியக் கடதாசி ஒன்றினால் திருப்திப்படுத்தப்பட வேண்டியதற்குத் தேவையான அத்துடன் இந்தப் பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஏதாவது ஒரு தகவல் ஒன்றின் ஏதாவது விவரம் ஒன்றினைப் பதிவு செய்ய முன் தொடர்ந்தும் புலனாய்வு செய்வது அவசியம் என பதிவாளரினால் ஏதாவது முக்கிய விடயங்கள் தொடர்பாக மேலதிக தகவல்களை வேறு ஏதாவது ஒரு ஆளிடம் இருந்து பெற்றுக்கொள்ள இயலுவதுடன், அவரினால் தேவையானவை எனக் கருதும் புலன் விசாரணை ஒன்றையும் நடாத்தவும் இயலும்.

(8) சரியான விசாரணை ஒன்றினால் மற்றும் அவ் விபரங்களில் தேவையான முறையில் திருத்தங்களை மேற்கொண்ட பின், அந்த தகவல்களைத் திருத்தப்பட்டவாறு பதிவாளரினால் பதிவு செய்ய இயலும்.

(9) (8) ஆவது உட் பிரிவினால் நடத்தப்பட்ட விசாரணையின் பின் ஏதாவது தகவல் ஒன்றினைப் பதிவு செய்வதை பதிவாளரினால் நிராகரிக்கும் சந்தர்ப்பம் ஒன்றில், அந் நிராகரிப்பினால் அதிருப்தி அடையும் நபரினால், அந்த நிராகரிப்பு செயற்பாடு அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்து முப்பது நாட்களுக்குள், அது தொடர்பாக விடயப் பொறுப்பு அமைச்சருக்கு அறிவிக்க இயலுவதுடன், அத் தீர்மானமே இறுதியானதும், தீர்மானம் மிக்கதாகவும் வேண்டும்.

பதிவு செய்வது தவணை தவறுவது தொடர்பான தண்டனை.

10. விபர தகவல் ஒன்று அல்லது விவரங்களில் ஏதாவது மாற்றம் ஒன்றினை மேற்கொண்டது தொடர்பான தகவல் ஒன்றினை வழங்குமாறு இந்த நியதிச் சட்டத்தின் கீழ் பணிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு வியாபார தாபனம் ஒன்று அல்லது ஆள் ஒருவரினால், நீதியான காரணம் ஒன்று இல்லாமல், இந்த நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் அத்துடன் அந்த முறையில் வழங்குவது தவணை தவறினால் அவ்வாறு தவணை தவறிய வியாபார தாபனத்தின் ஒவ்வொரு பங்காளியும் அல்லது அவ்வாறு தவணை தவறிய ஆள் மஜிஸ்ரேட் ஒருவரின் முன்னிலையில் நடைபெறும் சிறு வழக்கில் குற்றவாளி ஆகுமிடத்து தவணை தவறிய தொடர்ச்சியான ஒவ்வொரு தினத்திற்குமாகும் நாள் ஒன்றுக்கு இடைநிலைமைக்கு உரிய தண்டனைக்கு அவர் உட்பட்டாக வேண்டும். மேலும் அப்பங்காளி அல்லது ஆள் தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றம் முன்னிலையில் நடைபெறுமாயின் அந் நீதிமன்றத்தினால் தேவையான போது, தேவைப்படும் விவரங்கள் அடங்கிய தகவல் ஒன்றைக் கட்டளையில் குறிப்பிடும் கால எல்லையில் பதிவாளருக்கு வழங்குமாறு நீதிமன்றத்தினால் கட்டளையிட முடியும்.

தவணை தவறிய நபரினது கட்டளை.

11. (1) ஏதாவது வியாபாரம் ஒன்று தொடர்பான விவரத் தகவல் ஒன்று அல்லது விவரத்தில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தியது தொடர்பான தகவல் ஒன்றை வழங்குமாறு இந் நியதிச் சட்டத்தில் பணிக்கப்பட்டுள்ள வியாபார தாபனம் ஒன்று அல்லது ஆள் ஒருவரினால் அவ்வாறு மேற்கொள்வது தவணை தவறும் சந்தர்ப்பத்தில், தவணை தவறிய காலத்தினுள் ஏதாவது ஒரு நேரத்தில் அத் தவணை தவறியவரினால் அல்லது அவருக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது உள்ளடக்கப்பட்டுள்ள அத் வியாபாரத்திற்குரிய ஏதாவது ஒப்பந்தம் ஒன்றின் கீழ் அல்லது அதில் இருந்து தோன்றும், அத் தவணை தவறியவரின் உரிமை, வியாபார பெயர் அல்லது வேறு முறையில், வழக்கு ஒன்றின் மூலம் அல்லது வேறு வழக்கு நடவடிக்கைகளின் ஊடாக அதிகாரப்படுத்தப்படக்கூடாது.

எவ்வாறான போதும்,

(அ) இந்தப் பிரிவில் அமுல்படுத்தப்பட்ட தண்டனைக்கு எதிராக சலுகை ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு தவணை தவறியவரினால் நீதிமன்றத்திடம் வேண்டுகோள் ஒன்றினை விடுக்க முடிவதுடன், தவணை தவறியது இயற்கையாகவே நடந்த ஒன்று அல்லது கவனயீனத்தினால் நிகழ்ந்த ஒன்று அல்லது வேறு ஒரு காரணத்தினால் நிகழ்ந்ததொன்று என நீதிமன்றம் திருப்திப்பட்டால் அல்லது வேறு ஒரு காரணம் ஒன்றின் கீழ் சலுகை ஒன்றை வழங்குவது நீதியானதும் நேர்மையானதும் என நீதிமன்றம் திருப்திப்பட்டால், நீதிமன்றத்தினால் முன்னர் வழங்கிய கட்டளைக்கு புறம்பாக கட்டளை ஒன்று வழங்கினால் ஒழிய, வேண்டுகோள் விடுத்ததற்கு உரிய செலவைத் தவணை தவறினால் செலுத்தும் நிபந்தனையின் கீழ் நீதிமன்றத்தினால் அமுல்படுத்தப்படும் வேறு நிபந்தனைகள் காணப்பட்டால், அந்த நிபந்தனைகளின் கீழ், பொதுவாக இல்லாவிடின் ஏதாவது ஒரு விசேட உடன்படிக்கை தொடர்பாக நீதிமன்றத்தினால் அச் சலுகையை வழங்க இயலும், எனினும் நீதிமன்றத்தினால் கட்டளையிடப்படக்கூடியபடி வேண்டுகோள் விடுக்கக்கூடிய அறிவிப்பை ஒப்படைக்கப்பட்டு அல்லது பிரசுரிக்கப்பட்டு இருந்தால் தவிர அச்சலுகை வழங்கக் கூடாது.

(ஆ) இந்நியதிச்சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க தான் செயற்பட்டு இருந்தால் தான் ஏதாவது ஒப்பந்தம் ஒன்றுக்கு வராமல் இருந்து இருக்க முடியும் என ஒப்பந்தத்திற்கு வந்த ஏதாவது பகுதியினரினால் நீதிமன்றம் திருப்திப்படக்கூடிய முறையில் நிரூபித்தால் அவ் ஒப்பந்தம் தொடர்பாகவும் சலுகை வழங்கக் கூடாது ;

(இ) மேலே குறிப்பிடப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக தவணை தவறியவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் போது வேறு ஒரு பகுதியினருக்கு உரிய உரிமைகளுக்கு இதில் குறிப்பிடப்படும் எவற்றினாலும் பாதிப்பு ஒன்று இடம்பெறக்கூடாது ;

(ஈ) அவ் ஒப்பந்தம் தொடர்பாக வேறு ஒரு பகுதியினருக்கு உரிய உரிமையை நடைமுறைப் படுத்துவதற்காகக் தவணை தவறியவருக்கு எதிராக அப்பகுதியினரால் ஏதாவது ஒரு வழக்கொன்று அல்லது வழக்கு நடவடிக்கை ஒன்று தொடங்கப்பட்டு இருந்தால், அவ் ஒப்பந்தம் தொடர்பாக அப்பகுதியினருக்கு எதிராகத் தவணை தவறியவருக்கு இருக்கக்கூடிய உரிமை, அந்த வழக்கில் அல்லது வழக்கு செயற்பாடுகளில் குறுக்கு வேண்டுகோள் ஒன்றின் மூலம் அல்லது வேறு முறையில் தவணை தவறியவரினால் அதிகாரப்படுத்துவது இங்கு குறிப்பிடப்படும் அதாவது ஒன்றினால் தடுக்கப்படக்கூடாது.

(2) இந்தப் பிரிவில் "நீதிமன்றம்" என்பது ஒப்பந்தம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்காகத் தவணை தவறுபவரினால் வழக்கு ஒன்று அல்லது வேறு வழக்கு நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது ஏதாவது ஒரு நீதிமன்றத்தினாலாயின் அந்த நீதிமன்றம் என்ற கருத்தாகும்.

12. இந் நியதிச் சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என பணிக்கப்பட்டுள்ள தகவல் ஒன்றை கையொப்பம் இடும் ஏதாவது ஆள் ஒருவரின் அறிவுக்கு இணங்க பொய்யானதான ஏதாவது முக்கிய விவரம் ஒன்று அத்தகவலில் இடம்பெற்றால், வழக்கு விசாரணையில் அவ் ஆள் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது ரூபா இரண்டாயிரத்திற்கு மேற்படாத தண்டம் அல்லது அச் சிறைத்தண்டனை மற்றும் தண்டத்திற்கு அவர் உட்பட்டாக வேண்டும். *பொய்யான தகவல்கள் தொடர்பான தண்டனை.*

## *II ஆவது பிரிவு*

*நியமித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்*

13. (1) மாகாண வியாபார பெயர் பதிவாளராகச் செயற்படுவதற்கு ஆள் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். *பதிவாளரை நியமித்தல் மற்றும் பதிவாளரின் விடயங்கள்.*

(2) இந் நியதிச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் மாகாணத்தினுள் வியாபாரப் பெயர்களைப் பதிவு செய்வது தொடர்பான பொதுவான நிர்வாகம் மற்றும் மேற்பார்வை பதிவாளருக்கு உரியதாகும்.

14. இந் நியதிச் சட்டம் அல்லது அதன்கீழ், பதிவாளருக்கு அமுல்படுத்தப்பட்ட அத்துடன் அல்லது ஒப்படைக்கப்பட்ட ஏதாவது ஒரு அதிகாரம், கடமை அல்லது விடயம் பதிவாளரின் அதிகாரம் அல்லது மேற்பார்வை நிர்வாகத்தின்கீழ் நடைமுறைப்படுத்த அல்லது செயற்படுத்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு கையளிக்க இயலும். *அதிகார கையளிப்பு.*

*பதிவாளர் காரியாலயத்தை ஸ்தாபித்தல்.*

15. (1) இந் நியதிச் சட்டத்தின் விடயங்களை நிறைவேற்றுவதற்கு மாகாண வியாபார பெயர் பதிவாளர் திணைக்களம் ஒன்று ஸ்தாபிக்கப்படுகிறது.

(2) மாகாண வியாபார பெயர் பதிவாளர் அதன் தலைவராதல் வேண்டும்.

*பதிவாளருக்கு விவரங்களை சமர்ப்பிக்கும் பொறுப்பு.*

16. (1) ஏதாவது ஆள் ஒருவர் அல்லது அந்த ஆள் ஒருவர் பங்காளியான வியாபார தாபனம் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டுமா என இல்லையா என அல்லது பதிவு செய்யப்பட்ட விவரங்களில் மாற்றம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டுமா என அறிய தனக்கு அவசியம் என தமக்குத் தேவைப்படும் விவரங்களைத் தன்னால் பணிக்கப்படும் காலத்தினுள் வழங்குமாறு பதிவாளரினால் அந்த ஆள் பணிக்க இயலுவதுடன், கூட்டுத்தாபனம் ஒன்று சம்பந்தப்படும் இடத்து, அந்த விவரங்களை வழங்குமாறு அதன் செயலாளருக்கு அல்லது செயலாளரின் விடயங்களை மேற்கொள்ளும் கூட்டுத்தாபனத்தின் வேறு ஒரு உத்தியோகத்தர் ஒருவருக்கு பணிப்புரை விடுக்கலாம்.

(2) (1) ஆவது உட் பிரிவின் கீழ் பணிக்கப்பட்ட விவரங்கள் பதிவாளரினால் உறுதியாகக் குறிப்பிடும் காலத்தினுள் அல்லது அவரினால் மேலும் இடமளிக்கக் கூடிய காலம் ஒன்றினுள் வழங்காத ஏதாவது ஆள் ஒருவர் அல்லது பொய்யான தகவல்களை வழங்கும் ஏதாவது ஆள் ஒருவர் குற்றவாளியாகுவதுடன், வழக்கு விசாரணையில் குற்றவாளியாகிய பின் அத் தவறினை தொடர்ந்து மேற்கொள்ளும் ஒவ்வொரு தினத்திற்கும் ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறுக்கு மேற்படாத தண்டம் அல்லது ஆறு மாதத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது சிறைத் தண்டனைக்கு அல்லது தண்டம் ஆகிய இரண்டிற்கும் உட்பட வேண்டும்.

(3) (2) ஆவது உட்பிரிவின் கீழேயான ஏதாவது ஒரு வழக்கு நடவடிக்கையின்போது நீதிமன்றத்தினால் விடுக்கப்படும் கட்டளையில் உறுதியாகக் குறிப்பிடப்படும் விவரங்களை அக் கட்டளையில் குறிப்பிடப்படும் காலத்தினுள் பதிவாளருக்கு வழங்குமாறு அல்லது வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அவ் ஆளுக்கு கட்டளை இடுவது சிறந்தது என நீதிமன்றம் கருதும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தினால் அவ்வாறு கட்டளை இடமுடியும்.

(4) ஏதாவது ஒரு வியாபார தாபனம் ஒன்று அல்லது ஆள் ஒருவர் இந் நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும் என அல்லது பதிவு செய்யப்பட்ட விவரங்களில் திருத்தம் ஒன்றிளை மேற்கொள்ள வேண்டும் என, அவ்வாறு வழங்கப்பட்ட ஏதாவது தகவல்களில் பதிவாளருக்கு தெரிய வந்தால், அந்த வியாபார தாபனத்திற்கு அல்லது ஆளுக்கு இடமளிக்கப்படும் காலத்தினுள் தமக்குத் தேவையான விவரங்களைப் பெற்றுக் கொடுக்குமாறு அந்த வியாபார தாபனத்துக்கு அல்லது ஆளுக்கு அவரினால் பணிப்புரை வழங்க முடியும், எனினும் இந் நியதிச்சட்டத்தின் கீழ் ஏதாவது ஒரு தவணை தவறப்பட்டது என இப்பிரிவின் கீழ் பெற்றுக்கொண்ட தகவல்களில் இருந்து வெளியாகிய சந்தர்ப்பத்தில், இப்பிரிவின் கீழ் ஏதாவதுகாலமொன்றினுள் தமக்கு விவரங்களை வழங்குமாறு பதிவாளரினால் அவ்வியாபார தாபனத்திற்கு அல்லது ஆளுக்கு பணிக்கப்பட்டுள்ள வேளையில், அக்காலம் முடிவடைய முன் அவ் ஆளுக்கு எதிராக இந் நியதிச் சட்டத்தின் கீழ் வழக்கு நடவடிக்கை ஒன்றை ஆரம்பிக்க கூடாது.

*பரிசோதித்து பார்க்கும் அதிகாரம்.*

17. (1) இந் நியதிச்சட்டத்தின் கீழ் கடமைகளை மேற்கொள்வதற்கு தமக்கு அவசியமான தகவல்கள் தனக்கு வழங்க இடமில்லை எனத் தான் கருதினால் அல்லது அந்த ஆவணங்கள் குறிப்பிடப்பட்டு உள்ளது எனக் கருதினால் அல்லது அத்தகவல்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தான் சந்தேகித்தால், அத் தகவல்களை அறியும் பொருட்டு பரிசோதித்து பார்த்து பதிவாளர் பணிக்கும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அவ்வுத்தியோகத்தருக்காக நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்கு பதிவாளரினால் எழுத்து மூலமாக அதிகாரத்தினை ஒப்படைக்க முடிவதுடன், அந்த அதிகார ஒப்படைப்பு அதற்காக வைத்துப் பேணப்படும் ஏட்டில் பதியப்பட வேண்டும்.

(2) இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஏதாவது ஒரு தகவல் ஒன்றை அறிந்து கொள்ளும் விடயத்திற்காக (1) ஆவது உட்பிரிவின் கீழ் பதிவாளரினால் விசேடமாக அதிகாரம் அளிக்கப்பட்ட ஏதாவது ஒரு உத்தியோகத்தரினால், தேவையாயின் ஒவ்வொரு உத்தியோகத்தரும் அழைக்கப்பட இயலுவதுடன், கீழே குறிப்பிடப்படும் செயற்பாடுகளுக்குள் ஏதாவது ஒரு செயற்பாடு ஒன்று அல்லது அந்த எல்லாச் செயற்பாடுகள் யாவற்றையும் மேற்கொள்ள இயலும் –

(அ) ஏதாவது ஆள் ஒருவருக்கு அல்லது வியாபார தாபனம் ஒன்றுக்கு உரிமையான ஏதாவது புத்தகங்கள், ஏடுகள் அல்லது வேறு ஆவணங்கள் ஏதாவது ஒரு கட்டடம் ஒன்றில் அல்லது நிலையம் ஒன்றில் இருக்க இயலும் என தான் நம்பினால் அக்கட்டத்திற்கு அல்லது நிலையத்திற்கு உட்சென்று பரிசோதிக்க அத்துடன் அந்தப் புத்தகங்கள், ஏடுகள் அல்லது ஆவணங்களைப் பரிசோதிக்க அல்லது பரிசோதித்துப் பார்க்க இடமளித்தல் ;

(ஆ) ஏதாவது ஒரு கட்டடம் ஒன்றை. அல்லது நிலையம் ஒன்றைப் பரிசோதித்துப் பார்க்கும் வேளையில் கிடைக்கும் ஏதாவது ஒரு புத்தகம் ஒன்றில், ஏடு ஒன்றை ஆவணம் ஒன்றில் குறித்துக் கொள்ளல், பொருட் பதிவு ஏடு ஒன்றைத் தயாரித்தல் அல்லது பிரித்து எடுத்துக் கொள்ளுதல் ;

(இ) அந்தக் கட்டட அல்லது நிலையத்தில் இருந்து அவரைச் சந்திக்கும் ஆள் ஒருவரிடம் இருந்து, இந்நியதிச் சட்டத்திற்கு உரித்தான அல்லது இதன் கீழேயான விடயம் ஒன்று சம்பந்தமாக விசாரணை செய்வது, இந் நியதிச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் சோதனைகளுக்கு, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் வழக்கு ஏற்பாடுகள் சட்டத்தின் சோதனை செய்வதற்கு உரிய ஏற்பாடுகள் இயன்ற வரையில் உரியதாக வேண்டும் ; மேலும்

(ஈ) ஏதாவது கட்டடம் ஒன்றை அல்லது நிலையம் ஒன்றைச் சோதனை செய்யும் வேளையில் கிடைக்கும் ஏதாவது புத்தகம் ஒன்று, ஏடு ஒன்று அல்லது வேறு ஆவணம் ஒன்றை வெளியில் கொண்டு செல்ல அத்துடன் அது வெளியே கொண்டு செல்லப்பட்டது யாராவது ஆள் ஒருவரின் பொறுப்பிலேயாயின் அந்த ஆளுக்கு அதற்காக பற்றுச்சீட்டு ஒன்றை வழங்குவது அத்துடன் (1) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏட்டில் அப் புத்தகங்கள், ஏடுகள் மற்றும் வேறு ஆவணங்கள் தொடர்பான விவரங்களைத் தாமதம் இன்றி உள்ளடக்குதல் ;

(3) பதிவாளரினால் அல்லது பதிவாளரினால் எழுத்து வடிவில் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் பணிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவ்வாறு ஏதாவது ஒரு தகவலை வழங்குவதற்கு அல்லது ஏதாவது ஒரு புத்தகம் ஒன்றை, அறிக்கை ஒன்றை அல்லது வேறு ஆவணமொன்றை சமர்ப்பிப்பதற்கோ முடியாமல் போகும், மேல் கூறப்பட்ட ஏற்பாடுகளின்கீழ் ஏதாவது சோதனை ஒன்றை மேற்கொண்டு செல்லத் தடையை ஏற்படுத்தும் அல்லது இடம் வழங்காத ஏதாவது வியாபார தாபனம் ஒன்று அல்லது ஆள் ஒருவர், கூட்டுத்தாபனம் ஒன்று, துணை முகவர் ஒருவர், பணிப்பாளர் ஒருவர், உத்தியோகத்தர் ஒருவர்; அல்லது அவ்வாறான வியாபார தாபனம் ஒன்றின் ஆள் அல்லது ஒருவரின் ஊழியர் ஒருவர், அறியாமையினாலே தவறு இழைத்தது அல்லது அத் தவறு இடம்பெறுவதைத் தடுக்கத் தான் ஒழுங்கான முறையில் நடவடிக்கையை எடுத்தார் என அவரினால் நிரூபித்தாலொழிய, குற்றத்திற்கு குற்றவாளியாக வேண்டும்.

(4) (3) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தவறுக்கு இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றவாளியான ஆள், கூட்டுத்தாபனம் ஒன்றாகும் சந்தர்ப்பத்தில், தவறு இழைத்த வேளையில், அக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் ஒருவரும் அல்லது உத்தியோகத்தர் ஒவ்வொருவரும் அக்குற்றத்திற்கு குற்றவாளியாகக் கருதப்பட வேண்டியதுடன் வழக்கு விசாரணையில் குற்றவாளியாகிய பின் பன்னிரெண்டு மாதத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது ரூபா இரண்டாயிரத்திற்கும் மேற்படாத தண்டம் அல்லது அந்த சிறைத் தண்டனை மற்றும் தண்டம் ஆகிய இரண்டிற்கும் அவர் உட்பட்டாக வேண்டும்.

பதிவாளரினால் தகவல்களை கோப்பிடல் அத்துடன் பதிவு செய்யும் சான்றிதழை வழங்க மற்றும் பெயர் பலகை ஒன்று அத்துடன் இலக்கத் தினை சாட்சிப் படுத்த வேண்டும் என்பது.

18. (1) இந் நியதிச் சட்டத்திற்கு இணங்க ஏதாவது வியாபார தாபனம் ஒன்றின் அல்லது ஆள் ஒருவரின் தகவல் ஒன்று கிடைக்கப்பெற்ற பின், இந் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ், பதிவாளரினால் அதைப் பதிவு செய்ய மற்றும் கோப்பில் இட ஏற்பாடு செய்யப்பட பதிவுச் சான்றிதழ் ஒன்று அவரினால் அவ்வியாபார தாபனத்திற்கு அல்லது ஆளுக்கு தபாலின் மூலம் அனுப்ப அல்லது ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் கோப்பில் இட்டு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எவ்வாறான போதும், இந்நியதிச் சட்டம் ஆரம்பிக்கும் தினத்திற்கு முன் வழங்கப்பட்ட, வியாபார தாபனம் ஒன்றின் அல்லது ஆள் ஒருவரின் செல்லுபடியான பதிவுச் சான்றிதழ் ஒன்று, இப்பிரிவின் கீழ் செல்லுபடியாகும் சான்றிதழ் ஒன்றினை வழங்கும் வரை, 6 ஆவது பிரிவுக்கு கீழேயான எல்லா விடயங்களுக்கும் செல்லுபடியானதாக வேண்டும்.

(2) (1) ஆவது உட்பிரிவின கீழ் பதிவுச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்ட வியாபார தாபனம் ஒன்று அல்லது ஆளினால் அது கிடைக்கப்பெற்று பதினான்கு நாட்களுக்குள், அச்சான்றிதழ் அல்லது அதன் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று அந்த வியாபார தாபனத்தின் அல்லது ஆளினது பிரதான வியாபார நிலையம் மற்றும் வியாபாரம் நடாத்தும் ஏனைய எல்லா ஒவ்வொரு நிலையங்களிலும் தெளிவாகத் தெரியும் இடமொன்றில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(3) இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு ஆள் ஒருவரோ அல்லது வியாபார தாபனம் ஒன்றினாலோ –

(i) வியாபாரம் நடாத்தப்படும் ஒவ்வொரு நிலையத்திற்கு வெளியில் இலகுவாக வாசிக்கக்கூடிய எழுத்தில் தெளிவாகத் தெரியக்கூடிய இடமொன்றில் அந்த வியாபாரத்தின் பெயர் மற்றும் பதிவுச் சான்றிதழின் இலக்கத்தை மையினால் எழுத அல்லது ஒட்டி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் ;

(ii) தமது கடித தலைப்புக்களில் –

(அ) ஆள் ஒருவரினால் நடாத்தப்படும் அல்லது (பங்காளிகளில் ஒரு பங்காளிகூட, கூட்டுத்தாபனம் ஒன்றில் இல்லாத) வியாபார தாபனம் ஒன்றின் பங்காளிகளால் நடாத்தப்படும் வியாபாரம் ஒன்று சம்பந்தமான வேளையில், வியாபார பெயர் மற்றும் வியாபாரம் நடாத்தும் ஆட்களின் பெயர்கள் அல்லது எல்லாப் பங்காளிகளினதும் பெயர் மற்றும் வியாபாரப் பதிவுச் சான்றிதழ் இலக்கங்கள் மற்றும் அந்த வியாபாரத்தின் பிரதான வியாபார நிலையம் ;

(ஆ) (பங்காளிகளில் ஒருவர் அல்லது அதைவிடக்கூடிய எண்ணிக்கையையுடைய கூட்டுத்தாபனம் ஒன்றான) வியாபாரத் தாபனம் ஒன்றின் பங்காளிகளினால் மேற்கொண்டு செல்லும் வியாபாரம் ஒன்று தொடர்பானவிடத்து பதிவு செய்யப்பட்ட வியாபார பெயர், ஆள் ஒருவரான பங்காளிகள் அல்லது பல ஆட்கள் ஆகுமிடத்து பங்குதாரர்களின் பெயர் அல்லது பெயர்கள் மற்றும் கூட்டுத்தாபனப் பெயர் மற்றும் கூட்டுத்தாபனங்கள் ஆகிய எல்லாப் பங்காளிகளினதும் கூட்டுத்தாபனமாக்கப்பட்ட விபரம் அத்துடன் வியாபார பதிவுச் சான்றிதழ் இலக்கம் மற்றும் அந்த வியாபாரத்தின் பிரதான வியாபார நிலையம் ;

(இ) கூட்டுத்தாபனம் ஒன்றினால் நடாத்திச் செல்லப்படும் வியாபாரம் ஒன்று தொடர்பான இடத்து, கூட்டுத்தாபன பெயர் மற்றும் அக்கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபனமாக்கப்படும் விபரம் மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழ் இலக்கம் அத்துடன் அவ் வியாபாரத்தின் பிரதான வியாபார நிலையம்.

குறிப்பிடப்பட வேண்டும் ;

(iii) தமது பற்றுச் சீட்டுக்கள் மற்றும் இன்வொயிஸ்க்களில் ,

(அ) வியாபாரத்தின் பெயர் ; அத்துடன்

(ஆ) வியாபாரப் பதிவுச் சான்றிதழ் இலக்கம்
குறிப்பிடப்பட வேண்டும் .

(4) இந் நியதிச் சட்டத்தின் 5 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு வியாபார தாபனம் ஒன்றினாலும் அல்லது ஆள் ஒருவரினாலும் இப்பிரிவின் (2) ஆவது மற்றும் (3) ஆவது உட் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கிய வகையில் செயற்பட வேண்டும்.

(5) (2) ஆவது உட்பிரிவின் அல்லது (3) ஆவது உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கிய வகையில் செயற்படுவது தவணை தவறுமிடத்து அவ்வாறு தவணை தவறிய ஆள் ஒருவர் மற்றும் அவர் வியாபார தாபனம் ஒன்றின் பங்காளி ஒருவர் ஆயின் அந்த வியாபார தாபனத்தின் பங்காளி ஒருவரும் மற்றும் கூட்டுத்தாபனம் ஒன்றாகும் சந்தர்ப்பத்தில் அதன் ஒவ்வொரு பணிப்பாளர் மற்றும் செயலாளரும் தவறு இழைப்பதுடன் நேரடியான வழக்கு விசாரணை ஒன்றில் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து ரூபா இரண்டாயிரத்திற்கு மேற்படாத தண்டத்துக்கு அவர் உட்பட்டதாக வேண்டும்.

(6) ஏதாவது தகவல் ஒன்றைப் பதிவு செய்தல் அல்லது அப் பதிவுச் சான்றிதழ் அல்லது அத் தகவல்களை வழங்கிய நபருக்கு எதிராக அன்றி, அத் தகவலின் உண்மை தன்மை தொடர்பாக நேரடியாக அல்லது வேறு முறையில் சாட்சி எடுத்துக் கொள்ளக்கூடாது.

இலகுவில் அறியக்கூடிய முறை சுட்டி முறை ஒன்று இருக்க வேண்டும் என்பது.

19. இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்த எல்லா வியாபார தாபனங்கள் மற்றும் ஆட்களின் விவரங்களை இலகுவில் அறியக்கூடிய சுட்டி முறை ஒன்று, பதிவு செய்யப்பட்ட இலக்க ஒழுங்கில் ஒவ்வொரு பதிவுக் காரியாலயங்களிலும் பதிவாளரினால் பேணப்பட வேண்டியதுடன் மாகாணத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு காரியாலயங்களிலும் பதிவு செய்யப்பட்ட எல்லா வியாபார தாபனங்களினதும் மற்றும் ஆட்களினதும் வியாபார தாபனங்களினதும் வியாபார பெயர்களை இலகுவில் அறியும் பொது சுட்டி முறை ஒன்று பிரதான காரியாலயத்தில் இருக்க வேண்டும்.

*20. (1) இந் நியதிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதாவது வியாபார தாபனம் ஒன்றினால் அல்லது ஆள் ஒருவரினால் வியாபார பெயர் ஒன்றின்கீழ் தனது வியாபாரத்தை நடாத்தப்படுவது நிறுத்தப்பட்டால் அவ்வாறு நிறுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்து மூன்று மாதத்தினுள், அவ் வியாபார தாபனம் அல்லது ஆளினால் அந்த வியாபார பெயரின் கீழ் வியாபார நடவடிக்கை நடாத்துவது நிறைவு செய்யப்பட்டுள்ளது என உரிய படிவத்தின் மூலம் தகவல் ஒன்று பதிவாளருக்கு தபாலின் மூலம் அனுப்புவது அல்லது ஒப்படைப்பது, வியாபார நடவடிக்கை நிறுத்தப்பட்ட வேளையில் வியாபார தாபனத்தின் பங்காளிகளான ஆட்களினது அல்லது ஆளினது அல்லது அந்த ஆள் மரணம் எய்தி இருந்தால் அவரின் தனிப்பட்ட முகவரினது அல்லது கூட்டுத்தாபனம் ஒன்று தொடர்புபடும் இடத்து அதன் ஒவ்வொரு பணிப்பாளரினதும் கடமையாக வேண்டும்.* முடிவிடும் கட்டளை மற்றும் ஏடுகளில் இருந்து பெயர்களை அகற்றுதல்.

*(2) (1) ஆவது உப பிரிவில் பணிக்கப்பட்டுள்ள தகவலை வழங்குவது தனது விடயம் ஒன்றாக உள்ள ஆள் ஒருவரினால் மேலே கூறப்பட்ட காலத்தினுள் அவ்வாறு மேற்கொள்வது தவணை தவறுமிடத்து அவர் தவறு இழைப்பதுடன் நேரடியான வழக்கு விசாரணையின் பின் குற்றவாளியாகக் காணப்படும் இடத்து, ரூபா ஆயிரத்திற்கு மேற்படாத தண்டத்திற்கு அவர் உட்பட்டாக வேண்டும்.*

*(3) (1) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்படுவது கிடைக்கப்பெறுமிடத்து, பதிவாளரினால் அது கோப்பு செய்யப்பட வேண்டியதுடன், அவ்வியாபார தாபனத்தினது அல்லது ஆளினது பதிவை ஏட்டில் இருந்து அகற்றி ஏட்டில் குறிப்பு ஒன்று இட வேண்டும்.*

*(4) இந் நியதிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதாவது வியாபார தாபனம் ஒன்று அல்லது ஆள் ஒருவர் பதிவு செய்த பெயரின் கீழ் வியாபார நடவடிக்கையினை மேற்கொள்வது இல்லையென நம்பக்கூடிய நீதியான காரணங்கள் பதிவாளருக்கு உள்ளவிடத்து,*

*(அ) வர்த்தமானி பத்திரிகையில் அறிவிப்பு ஒன்றினை பிரசுரித்து ஒரு மாதத்திற்குள் தமக்கு ஆட்சேபனை ஒன்று கிடைக்கப்பெறாத இடத்து அந்த வியாபார தாபனம் அல்லது ஆளினது பெயரினை அகற்றுவதாகக் குறிப்பிட்டு அறிவிப்பு ஒன்றை வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்க; அத்துடன்*

*(ஆ) அவ் அறிவிப்பின் பிரதி ஒன்றை அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபார தாபனத்தினால் அல்லது ஆளினது ஒவ்வொரு பங்காளிகளுக்கும் அவர்களின் வியாபார முகவரிக்கு பதிவு தபாலில் விரைவாக அனுப்ப அவரினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.*

*(5) அவ் அறிவிப்பு அனுப்பப்பட்ட பின் ஒரு மாதத்தினுள் அவ் அறிவிப்பு தொடர்பான ஆட்சேபனை ஒன்று பதிவாளருக்கு கிடைக்கப்பெறாத இடத்து, அவ்வியாபார தாபனத்தின் அல்லது ஆளின் பெயரை அவரினால் ஏட்டில் இருந்து அகற்ற இயலும்.*

*21. (1) ஏதாவது ஒரு வியாபார பெயர் ஒன்றை உபயோகிப்பது தற்காலத்தில் அதிகாரத்தில் இருக்கும் ஏதாவது சட்டத்திற்கு முரணானது என்றோ அல்லது உபயோகிப்பது 8 ஆவது பிரிவின் கீழ் தடை செய்யப்பட்ட வியாபார பெயர் ஒன்று என்றோ பதிவாளரினால் திருப்திப்படும் சந்தர்ப்பத்தில், அவ்வியாபார பெயரின் கீழ் வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்லும் ஏதாவது வியாபார தாபனம் ஒன்றின் அல்லது ஆளொருவரின் பதிவை அவரினால் நிராகரிக்க இயலும்.* பதிவை நிராகரிப்பதற்கு காணப்படும் அதிகாரம்.

*(2) இந்நியதிச் சட்டத்தின் கீழ் வியாபார பெயர் ஒன்றைப் பதிவு செய்வதற்குப் புறம்பாக, அதை உபயோகிப்பதை தடைசெய்ய இயலுமாயின், அதை உபயோகிப்பதற்கு அப் பதிவின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டதாகக் கருதப்படக்கூடாது.*

*22. (1) பதிவு ஒன்றை நிராகரிப்பதற்கு 21 ஆம் பிரிவின் (1) ஆவது உட்பிரிவில் அதிகாரம் கிடைக்கப்பெற்றது ஏதாவது காரணம் ஒன்றினாயின் அக்காரணங்களுள் ஏதாவது காரணம் ஒன்றின் கீழ், வியாபார பெயரின்கீழ் வியாபார நடவடிக்கையினை நடாத்திச் செல்லும் ஏதாவது வியாபார தாபனம் ஒன்றின் அல்லது ஆள் ஒருவரின் பதிவு (3) ஆவது உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ், பதிவாளரினால் நிறைவு செய்யப்படலாம்.* பதிவு செய்வதை நிறைவு செய்ய காணப்படும் அதிகாரம்.

(2) வியாபார பெயர் ஒன்றை மாற்றுவதற்காக தமக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லையினுள் எடுக்குமாறு அவ் வியாபார பெயரின் கீழ் வியாபாரத்தினை மேற்கொண்டு செல்லும் வியாபாரத் தாபனத்திற்கு அல்லது ஆளுக்கு பதிவாளரினால் பதிவு தபாலில் அறிவிப்பு ஒன்று அனுப்பப்பட்டு இருந்தாலொழிய (1) ஆவது உட் பிரிவின் கீழ் பதிவை நிறுத்துவது இடம் பெறக்கூடாது.

(3) வியாபார பெயர் ஒன்றை மாற்றுவதற்காக பதிவாளருக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய அம்சங்களை (2) ஆவது உட்பிரிவின் கீழேயான விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லையினுள் எடுப்பதை வியாபார தாபனம் அல்லது ஆள் தவணை தவறுமிடத்து அக்கால எல்லையின் இறுதியில் அவ் வியாபார தாபனத்தின் அல்லது ஆளினது பதிவு பதிவாளரினால் நிறைவு செய்யப்படவேண்டியதுடன் அவ் வியாபார தாபனத்தில் அல்லது ஆளினது பெயர் ஏடுகளில் இருந்து அகற்றப்பட வேண்டும்.

நிராகரிக்கப்பட்ட அல்லது மூடப் பட்ட வியாபார பெயர் ஒன்றை உபயோகிப்பதற் குரிய தண்டனை.

23. இந்நியதிச் சட்டத்தின் கீழ் வியாபார பெயர் ஒன்றைப் பதிவு செய்யாது நிராகரிக்கப்பட்ட அல்லது மூடப்பட்ட சந்தர்ப்பம் ஒன்றில் அவ் வியாபார பெயரினை தொடர்ந்தும் உபயோகிக்கும் ஏதாவது வியாபார தாபனம் ஒன்று ஆள் ஒருவர் தவறு இழைப்பதுடன் மஜிஸ்ரேட் ஒருவர் முன்னிலையில் நடைபெறும் வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாகக் காணப்படும் இடத்து, ரூபா இரண்டாயிரத்திற்கு மேற்படாத தண்டத்திற்கும் மற்றும் குற்றம் இழைத்த பின்னர் தவறினை தொடர்ந்தும் இழைக்கும் ஒவ்வொரு நாள் ஒன்றுக்கும் ரூபா நூறு தொடர்ச்சியான தண்டத்திற்கும் அவர் உட்பட்டாக வேண்டும்.

பதிவு செய்வதை நிராகரித்தல் அல்லது மூடிவிடுதல் தொடர்பான அறிவித்தல்.

24. பதிவாளரினால் வியாபார பெயர் ஒன்றைப் பதிவு செய்வது நிராகரிக்கப்படும் அல்லது 20 ஆவது, 21 ஆவது, 22 ஆவது பிரிவுகளின் கீழ் ஏதாவது வியாபார தாபனம் ஒன்று அல்லது ஆள் ஒருவரைப் பதிவு செய்வதை அகற்றும் அல்லது நிறைவு செய்யும் சந்தர்ப்பம் ஒன்றில் அதை நிராகரிப்பது, அகற்றுவது அல்லது மூடிவிடுவது தொடர்பான அறிவிப்பு, அவ் வியாபார தாபனத்திற்கு அல்லது ஆளுக்கு தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

மேன்முறையீடு.

25. இந் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க பதிவாளரினால் எடுக்கப்பட்ட ஏதாவது தீர்மானம் ஒன்று அல்லது மேற்கொள்ளப்பட்ட பணிப்புக்களில் திருப்தியடையாத எந்த ஒரு ஆளினாலும் அவ் முடிவு அல்லது பணிப்பு தமக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்ட பின் விடய பொறுப்பு அமைச்சருக்கு மேன்முறையீட்டை மேற்கொள்ள இயலுவதுடன் அம் முடிவானது இறுதியானதும் மற்றும் தீர்மானத்திற்கு உரியதாக வேண்டும்.

முத்திரைக் கட்டணங்களில் இருந்து விலக்களித்தல்.

26. ஏதாவது நீதிமன்றம் ஒன்றின் முன்னிலையில் நடைபெறும் எல்லா வழக்கு விசாரணைகளின்போது,

(அ) ஏதாவது ஒரு முத்திரை ஒன்றை வழங்குமாறு அல்லது ஏதாவது ஒரு முத்திரைக் கட்டணத்தினைச் செலுத்துமாறு பணிப்பாளருக்கு பணிப்புரை விடுக்கப்படக்கூடாது ;

(ஆ) பதிவாளரின் வழக்கு கட்டணம் நீதிமன்றத்தின் தற்றுணிப்புக்கு இணங்க தீர்மானிக்கப்பட வேண்டியதுடன், வேறு ஒரு பகுதியினரின் வழக்கு கட்டணத்தினைச் செலுத்துமாறு பதிவாளருக்கு கட்டளை பிறப்பிக்கக் கூடாது.

பதிவு செய்யப் பட்ட தகவலைப் பரிசோதித்துப் பார்த்தல் அத்துடன் சான்று படுத்தப்பட்ட பிரதி களை வழங்குதல்.

27. (1) பதிவாளரினால் கோப்பில் இடப்பட்டுள்ள ஆவணங்களை, பணிக்கப்படும் கட்டணத்தைச் செலுத்தி, ஏதாவது ஒரு ஆள் ஒருவரினால் பரிசோதித்துப் பார்க்க இயலும்.

(2) ஏதாவது வியாபார தாபனம் ஒன்றின் அல்லது ஆள் ஒருவரின் பதிவு சான்றிதழ் ஒன்று அல்லது ஏதாவது உரிய படிவம் ஒன்றில் வழங்கப்பட்ட ஏதாவது தகவல் ஒன்றின் பிரதி ஒன்றையோ அல்லது பிரித்து எடுப்பு ஒன்றையோ பதிவாளர் மூலமாக சான்றுபடுத்திக் கொள்ள ஏதாவது ஆள் ஒருவினால் வேண்டுகோள் விடுக்க இயலும் அச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றுக்காக அல்லது பிரித்தெடுப்புக்காக பணிக்கப்படும் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

(3) பதிவுச் சான்றிதழ் ஒன்று அல்லது இந் நியதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட தகவல் ஒன்றின் பிரதி ஒன்று அல்லது போட்டோ பிரதி ஒன்று அல்லது பிரித்தெடுப்பு ஒன்று, அது சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றாக பதிவாளரின் உரிய முறையில் கையொப்பமிட்டு சான்றுப்படுத்தப்பட்டு இருத்தல், (அது வியாபார பெயர் பதிவாளரினால் கையொப்பமிடப்பட்டது என நிரூபிப்பது அவசியமன்று) எல்லா சிவில் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின்போது சாட்சியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

*ஏதாவது ஒரு அறிக்கை ஆவணம் ஒன்றின் சேதமாகிய அத்தியாயம் ஒன்றின் அல்லது சேதமாகிய கோப்பு ஒன்றின் அல்லது ஏடு ஒன்றின் பிரதி ஒன்றினைப் பெற்றுக்கொள்வது மற்றும் மீண்டும் தயாரித்த பக்கத்தை உள்ளடக்கும் அதிகாரம்.*

*28. (1)* இந் நியதிச் சட்டத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ள ஏதாவது அறிக்கை ஆவணமொன்றின் ஏதாவது அத்தியாயம் ஒன்று அல்லது கோப்பு ஒன்றின் ஆவணமொன்று மீண்டும் புதுப்பித்துக் கொள்ள முடியாத வகையில் பாதிப்புக்குள்ளாகியது என பதிவாளர் திருப்திப்படும் சந்தர்ப்பத்தில், அவ் அத்தியாயத்தின் கோப்பின் அல்லது ஆவணத்தின் பிரதியொன்றை அவரினால் பணிக்கப்படுவதைப் போன்று தயாரிப்பதற்கு மற்றும் மீள்பதிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தயாரிக்கப்பட்ட மீள் பதிப்புச் செய்யப்பட்ட ஏதாவது பிரதி ஒன்று, பக்கம் ஒன்று அல்லாவிடின் ஆவணமொன்று, அவ் அத்தியாயத்தின் பக்கம் ஒன்றுக்கு அல்லது ஆவணத்திற்கு மீள் பதிப்புச் செய்யப்பட வேண்டியதுடன், அந்தப் பிரதி மீள் பதிப்புச் செய்ப்பட்ட அத்தியாயத்தில், கோப்பில் அல்லது ஆவணத்தில் இருந்த சட்டரீதியான செயற்பாடுகளுக்கும் அதனோடு தொடர்புடைய எல்லா விடயங்களுக்காகவும் உரியதாகக் கருதிக் கொள்ள வேண்டும் .

(3) (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பிரதி ஒன்று தயாரிக்கப்பட்ட அழிவுக்கு உள்ளதான ஒவ்வொரு அத்தியாயத்தையும், கோப்பினையும் அல்லது ஆவணத்தையும் தேவைக்கு ஏற்ப பொதுவாக வைத்துக்கொள்ளக்கூடிய காலத்திற்கு பேண பதிவாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(4) ஏதாவது அறிக்கை ஆவணத்தின் அத்தியாயம் ஒன்றின் அல்லது கோப்பு ஒன்றின் ஏதாவது ஒரு பக்கம் ஒன்று தொலைந்துபோய் தேடிக்கண்டு பிடிக்க முடியாதுள்ளது என அல்லது அந்தப் பக்கம் நிரந்தரமாக கிழிந்து போயுள்ளது என அல்லது அதில் காணப்படும் குறிப்பொன்று அல்லது அதன் குறிப்புக்களில் ஏதாவது முக்கிய பகுதி ஒன்று வாசிக்க முடியாதபடி அழிந்து போயுள்ளது என அல்லது அழிவுக்கு உட்பட்டுள்ளது என, ஒழுங்கான பரிசோதனையின் பின் பதிவாளர் திருப்திப்படும் பட்சத்தில் புதிதாக ஆவணப்படுத்தப்பட்ட பக்கம் ஒன்றினைத் தயாரிக்க அவரினால் நடவடிக்கை எடுக்க இயலும்.

(5) கீழே உள்ள விடயங்களுக்காக ஏற்பாடு செய்யும் பணிப்புரைகளைத் தவிர (4) ஆவது உட்பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டதைப்போன்று எந்த ஒரு பக்கம் ஒன்றும் மீண்டும் தயாரிக்கப்படக்கூடாது :-

(அ) காணாமல் போன அல்லது கிழிந்த அல்லது அழிவுக்கு உள்ளான பக்கம் ஒன்றில் முன்னர் உள்ளடக்கப்பட்டு இருந்து விவரங்களை அறிய பதிவாளரினால் சாட்சியாக ஏற்றுக்கொள்ள மற்றும் பயன்படுத்தல் ;

(ஆ) மீண்டும் தயாரிக்கப்பட்ட பக்கம் ஒன்றினைத் தயாரிப்பதற்காக பதிவாளரினால் அறிவித்தல் ;

(இ) மீண்டும் தயாரிக்கப்பட்ட பக்கமொன்றில் உள்ளடக்கப்படும் விவரங்களில் ஏதாவது நிர்ப்பந்தம் ஒன்று நிகழ்ந்தது என ஆள் ஒருவரினால் ஆட்சேபனை ஒன்றைச் சமர்ப்பித்தல் ; அத்துடன்

(ஈ) அவ்வாறான ஏதாவது ஆட்சேபனைகளை பதிவாளரினால் விசாரணை செய்தல்.

(6) இப்பிரிவில் மேல் கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க பதிவாளரினால் பக்கம் ஒன்று மீள் பதிப்புச் செய்யப்பட்ட வேளையில், அப்புதிதாகத் தயாரிக்கப்பட்ட பக்கம் பதிவாளரினால் உரிய முறையில் பரிசோதித்துப் பார்க்க வேண்டியதுடன், அதன் பின் அந்த புதிதாகத் தயாரிக்கப்பட்ட பக்கம், ஏட்டின் உரிய அத்தியாயத்தில் அக் காணாமல் போன, அழிவுக்கு உட்பட்ட அல்லது பாதிப்புக்கு உட்பட்ட முதலாவது பக்கம் காணப்பட்ட இடத்தில், அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப இப்பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழ் தயாரிக்கப்பட்ட அத்தியாயத்தின் பிரதிக்கு உள்ளடக்க, ஏற்பாடு செய்ய வேண்டும். புதிதாகத் தயாரிக்கப்பட்ட பக்கம் அவ்வாறு நிரூபிக்கப்படுமிடத்து, அவ்வாறு புதிதாகத் தயாரிக்கப்பட்ட பக்கம் ஒன்றின் மீள் செய்யப்பட்ட அப் பக்கத்திற்கு காணப்பட்ட சட்டரீதியான அதிகாரமும் நிர்ப்பந்தமும் உரிய எல்லா விடயங்களுக்கும் உரியதாகக் கருதிக் கொள்ளப்பட வேண்டும்.

(7) இந்நியதிச் சட்ட ஏற்பாடுகளின்கீழ் வைக்கப்பட்டுள்ள அல்லது வெளியிடப்பட்டுள்ள ஏதாவது, ஒரு அறிக்கை ஆவணம் ஒன்றில் அல்லது சான்றிதழ் ஒன்றில், கடித கோப்பொன்றில் அல்லது ஆவணமொன்றில் அறியும் ஏதாவது ஒரு கடிதத்தில் குறைபாடு அல்லது கைவிடல் ஒன்று, தன்னால் அவசியமானது எனக் கருதும் விசாரணையின் பின் பதிவாளரினால் திருத்திக்கொள்ள இயலுவதுடன், அவ் விடயத்திற்காக அச் சான்றிதழை மீண்டும் அழைப்பித்து திருத்துவது அல்லது அதற்காக புதிதாக சான்றிதழ் ஒன்றை வழங்குவதை மேற்கொள்ள இயலும்.

அறிவிப்பினை ஒப்படைத்தல்.

*29.* இந்நியதிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் வழங்க அல்லது ஒப்படைக்க வேண்டும் என பணிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு அறிவிப்பு ஒன்று, எழுத்து மூலமான அறிவித்தல் ஒன்று, சான்றிதழ் ஒன்று அல்லது வேறு ஆவணம் ஒன்று அதைக் கேட்ட ஆளினது பதிவு செய்யப்பட்ட பிரதான வியாபார நிலையத்திற்கு வியாபாரப் பெயர் பதிவாளரினால் பதிவுத் தபாலில் அனுப்பி இருந்தால், அது உரிய முறையில் வழங்கப்பட்டு உள்ளது என அல்லது ஒப்படைக்கப்பட்டுள்ளது எனக் கருதிக் கொள்ளப்பட வேண்டும்.

விண்ணப்பமொன்று இரத்தாகும் சந்தர்ப்பம்.

*30. (1)* வியாபார தாபனம் ஒன்று அல்லது ஆள் ஒருவர் இந்நியதிச் சட்டத்தின் 5 ஆவது, 6 ஆவது, 9 ஆவது பிரிவுகளின் கீழ் தகவல்களை வழங்கி உள்ளபோதும், பதிவுச் சான்றிதழை வழங்குவதற்கு பதிவாளரினால் ஆவணம் ஒன்றின்மூலம் பணிக்கப்பட்டுள்ள விவரங்களை சமர்ப்பிப்பது அல்லது ஆவணம் ஒன்றின் மூலம் பணிக்கப்படும் ஏதாவது திருத்தத்தை ஆரம்ப வேண்டுகோளில் உள்ளடக்குவது தவணை தவறுமிடத்து பதிவாளரினால் பணிக்கப்படும் விவரங்களை வழங்குமாறு அல்லது அவர் பணிக்கும் திருத்திய வேண்டுகோளில் உள்ளடக்குமாறு அல்லது எழுத்துமூலமாக வியாபார தாபனத்திற்கு அல்லது ஆளுக்கு பதிவாளரினால் உரிய படிவத்தில் வழங்க இயலும், ஒரு மாத கால எல்லையினுள் அல்லது பதிவாளரினால் வழங்கப்படும் அதைவிடக்கூடிய காலமொன்றினுள் அவ் வியாபார தாபனம் அல்லது ஆளினால் அவ் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை மேற்கொள்வது தவணை தவறுமிடத்து அந்த வேண்டுகோள் இரத்தாகியதாக பதிவாளரினால் கருதிக் கொள்ளப்பட வேண்டியதுடன், அதன் கீழ் சான்றிதழ் ஒன்றை வழங்க தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்காமல் இருக்க இயலும்.

எவ்வாறான போதும், ஆரம்ப வேண்டுகோளின் கீழ் பணிக்கப்படும் அதிகரிப்புக் கட்டணம் ஒன்று அவ்வியாபார தாபனம் அல்லது ஆளினால் செலுத்தினாலோ மற்றும் பதிவாளரினால் பணிக்கப்பட்ட அவ் விவரங்களை வழங்கினாலோ அல்லது அவரினால் பணிக்கப்பட்ட திருத்தங்களை ஆரம்ப வேண்டுகோளில் உள்ளடக்கினாலோ பதிவாளரினால் அவ்வாறு இரத்தாகிய வேண்டுகோளின்கீழ் தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்க இயலும்.

*(2)* பதிவு செய்வது இந்தப் பிரிவின்கீழ் இரத்தாகிய வியாபாரப் பெயர் ஒன்றை உபயோகிப்பதை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் ஏதாவது ஒரு வியாபாரப் தாபனம் ஒன்று அல்லது ஆள் ஒருவர் (1) ஆவது உட்பிரிவின் துணைப்பிரிவிற்கு இணங்கிய வகையில் நடவடிக்கை எடுக்காதவிடத்து அவ் வியாபார தாபனம் அல்லது ஆள், தவறு ஒன்றை இழைப்பதுடன், மஜிஸ்திரேட் ஒருவரின் முன்னிலையில் நடைபெறும் நேரடி வழக்கு விசாரணையின் பின் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து, ரூபா இரண்டாயிரத்திற்கு மேற்படாத தண்டத்திற்கு அத்துடன் குற்றவாளியாகிய பின் தவறினை தொடர்ந்தும் இழைக்கும் ஒவ்வொரு தினத்திற்கும் ரூபா நூறுக்கு உரிய தொடர்ச்சியான தண்டத்திற்கு அவர் உட்பட்டாக வேண்டும்.

விதிகளினால் கட்டணம் அறவிட முடியும் என்று.

*31.* இந் நியதிச்சட்டத்தின் கீழ் வியாபாரப் பெயர் பதிவுச் சான்றிதழை வழங்க அல்லது வேறு ஏதாவது தகவல் ஒன்றை வழங்க விடயப் பொறுப்பு அமைச்சரினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் விதிகளின் மூலம் கட்டணத்தை அமுல்படுத்தலாம் அவ் விதிகள் பின்வரும் 32 ஆவது பிரிவின் கீழே மேல் மாகாணத்தின் வியாபார விடையப் பொறுப்பு அமைச்சரினால் இயற்றப்படலாம்.

விதிகளைத் தயாரிக்கும் அதிகாரம்.

*32. (1)* கீழே காணப்படும் விடயங்கள் எந்தவொன்றுக்காகவும் வியாபார விடயப் பொறுப்பு மாகாண அமைச்சரினால் விதிகளை ஆக்கிக்கொள்ள இயலும் :-

(அ) இந் நியதிச் சட்டத்தின் கீழ் அறவிடப்படும் கட்டணம் ;

(ஆ) இந் நியதிச்சட்டத்தின்கீழ் உபயோகிக்கப்பட வேண்டிய படிவம் ;

(இ) இந் நியதிச்சட்டத்தின் கீழ் பேணப்படும் ஆவணங்கள் அல்லது அவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள விபரங்கள் தொடர்பான அறிக்கைகளை வர்த்தமானி பத்திரிகை அல்லது வேறு முறையில் காலத்திற்குக் காலம் வெளியிடுதல் ;

(ஈ) ஏதாவது வியாபார பெயர் ஒன்றை பதிவு செய்தல், மாற்றம் ஒன்றை ஏற்படுத்தல், இரத்துச் செய்தல் போன்ற சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆவணங்கள் ;

(உ) இந் நியதிச்சட்டத்தின்கீழ் பதிவு செய்வது தொடர்பாக பொதுவான பிரமாணங்கள், நிர்வாகம் மற்றும் அதனோடு இணைந்த ஏனைய விடயங்கள்.

*(2)* அமைச்சரினால் இயற்றப்படும் ஒவ்வொரு விதியும் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட தினத்தில் அல்லது விதிகளில் குறிப்பிடப்படும் ஏதாவது தினம் ஒன்றில் இருந்து நடைமுறைக்கு வரவேண்டும்.

(3) அமைச்சரினால் இயற்றப்படும் ஒவ்வொரு விதி ஒன்றும் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பின்னர் மூன்று மாத காலத்தினுள் அங்கீகாரத்திற்காக மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வொரு விதி ஒன்றும், அங்கீகரிக்கப்படாத தினத்தில் இருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டிய போதும், அதன்கீழ் அது வரை மேற்கொள்ளப்பட்ட எந்த ஒன்றுக்கும் பாதிப்பு ஒன்று நிகழக் கூடாது.

(5) ஏதாவது விதி ஒன்று இல்லாது ஒழிக்கப்பட்ட தினமாகக் கருதப்படும் தினம் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

பொய்யான தகவல்கள் அல்லது வியாபார பெயர் பதிவினை மேற்கொள்ளும்போது பொய்யான விடயங்களை வழங்குவதற்கு உரிய தண்டனை.

33. (1) (அ) வியாபார பெயர் ஒன்று பதிவு செய்யப்படாது இருக்கும்போது தெரிந்து கொண்டே அது பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கருத்துத் தெரிவிக்கும் அல்லது வியாபார பெயருடன் பொய்யான அல்லது தவறான இலக்கம் ஒன்றைத் தெரிந்து கொண்டே பயன்படுத்தும்.

(ஆ) இந் நியதிச் சட்டத்தின்கீழ், ஏதாவது ஒரு தகவல் ஒன்று அல்லது சத்தியக் கடதாசி ஒன்று பொய்யானது எனத் தெரிந்து கொண்டே சமர்ப்பிக்கும் அல்லது வழங்கும் அல்லது சமர்ப்பிப்பதற்கு அல்லது வழங்குவதற்கு இடமளிக்கும் ஏதாவது ஆள் ஒருவர் தவறு இழைப்பதுடன், மஜிஸ்ரேட்டர் ஒருவர் முன்னிலையில் நடைபெறும் நேரடி வழக்கு விசாரணையின் பின்னர் குற்றவாளியாகக் காணப்படும் இடத்து, ரூபா இரண்டாயிரத்திற்கு மேற்படாத தண்டம் அல்லது ஆறு மாத காலத்திற்குமேற்படாத சிறைத்தண்டனைக்கு அவர் உட்பட்டாக வேண்டும்.

கூட்டுத்தாபனம் ஒன்றினால் இழைக்கப்படும் தவறு.

34. கூட்டுத்தாபனம் ஒன்றினால் இந் நியதிச்சட்டத்தின் கீழ் தவறு இழைக்கப்பட்ட சந்தர்ப்பம் ஒன்றில், குற்றம் இழைக்கப்பட்ட வேளையில் அக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் ஒருவராக, முகாமையாளர் ஒருவராக, செயலாளர் ஒருவராக அல்லது வேறு பொதுவான உத்தியோகத்தர் ஒருவராக இருந்த அல்லது அப் பதவியில் கடமையாற்ற இணைக்கப்பட்டு இருந்த ஒவ்வொரு ஆள் அத் தவறு இழைக்கப்பட்டது தனது விருப்பம் அல்லது அறிவுக்கு எட்டிய வகையிலன்றி எனவும், அவ்வேளையில் ஒருவரும் அப் பதவிக்கு உரிய எல்லா அம்சங்களையும் கருத்தில் கொண்டு தவறு நிகழ்வதை தடுக்க தான் செயற்பட்டார் என அவரினால் நிரூபித்தால் ஒழிய அந்தத் தவறு இழைக்கப்பட்டுள்ளது எனக் கருதிக்கொள்ளப்பட வேண்டும்.

சில தவறுகளை இணக்கத்திற்கு கொண்டு வருதல்.

35. (1) ஏதாவது விபரங்கள் தொடர்பான தகவல் ஒன்று அல்லது விபரங்களின் திருத்தம் தொடர்பான தகவல் ஒன்று அல்லது இந் நியதிச்சட்டத்தின் கீழே பதிவாளருக்கு வழங்குவதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு அல்லது அனுப்புவதற்கு இவ் இணக்கத்தின் ஏதாவது ஏற்பாடு ஒன்றினால் ஏதாவது ஒரு வியாபார தாபனம் ஒன்றுக்கு அல்லது ஆள் ஒருவருக்கு பணிக்கப்பட்டுள்ளபோது அவ் வியாபார தாபனம் அல்லது ஆளினால் அவ் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்படுவது தவணை தவறுமிடத்து மற்றும் அத் தவணை தவறுதலின் காரணமாக அந்த வியாபார தாபனத்தினால் அல்லது ஆளினால் இந் நியதிச்சட்டத்திற்கு எதிராகத் தவறு ஒன்று இழைக்கப்பட்டுள்ள வேளையில், நீதிமன்றம் ஒன்றில் வழக்கு ஒன்று தொடுப்பதற்குப் பதிலாக அல்லது அவ்வாறான வழக்கொன்று தற்போது தொடுக்கப்பட்டு இருந்தால், அந்தத் தவறு தொடர்பாக வியாபார தாபனத்திற்கு அல்லது ஆளுக்கு எதிராக அந்த வழக்கைத் தொடர்ந்து மேற்கொண்டு செல்வதற்குப் பதிலாக, பதிவாளர் சிறந்தது எனக் கருதினால், அந்த வியாபார தாபனத்தின் அல்லது ஆளின் தவறுக்கு இழப்பீடாக, பதிவாளர் சிறந்தது எனக் கருதும் நிதியைப் பெற்றுக்கொள்ள இயலுவதுடன், அவ்வாறு பெற்றுக்கொள்ளும் ஏதாவது நிதி திரட்டிய நிதிக்கு வரவு வைக்கப்பட வேண்டும். மேலும் அவ்வாறு தவறுக்கு இழப்பீடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒவ்வொரு நிதி தொடர்பான அறிக்கையும் பதிவாளரினால் பேணப்பட்டு மற்றும் காணப்படும் ஏடுகளில் பதியப்படவும் வேண்டும்.

(2) ஏதாவது தவறு ஒன்றுக்கு இழப்பீடாக (1) வது உட் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஏதாவது நிதி ஒன்று பதிவாளரினால் பொறுப்பேற்கப்பட்ட வேளையில், அத் தவறு தொடர்பாக அவ்வியாபார தாபனத்திற்கு அல்லது ஆளுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டு இருந்தால் அவ் வழக்கு நடவடிக்கையை தொடர்ந்தும் மேற்கொண்டு செல்வது இடம்பெறக் கூடாது.

(3) (1) உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தவறுக்கு இழப்பீடாகச் செலுத்த வேண்டிய ஏதாவது நிதி ஒன்று பதிவாளரினால் பணிக்கப்பட்ட தினத்தில் இருந்து ஒரு மாதத்தினுள் அல்லது அவரினால் இடமளிக்கப்படும் அதைவிடக்கூடிய காலம் ஒன்றினுள் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில், கொடுப்பனவு தவணை தவறுவது தொடர்பாக பதிவாளரினால் மஜிஸ்ரேட் ஒருவருக்கு அறிவிக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு தவணை தவறுவதற்கு உரிய நிதி, அவ் நீதிமன்றத்தினால் அமுல்படுத்தப்பட்ட தண்டம் ஒன்றை அறவிடப்படும் முறையிலேயே அந்த வியாபார தாபனத்திடம் இருந்து அல்லது ஆளிடம் இருந்து அறவிடப்பட வேண்டும். மேலும் தவணை தவறிய அந்த நிதியைத் திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்குமாறு நீதிமன்றத்தினால் கட்டளை இடப்பட வேண்டும்.

பதிவாளரினால் தற்றுணிபு அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்.

36. இந்த நியதிச்சட்டம் அல்லது அதன்கீழ் இயற்றப்பட்ட விதி ஒன்றின்கீழ் பதிவாளருக்கு தற்றுணிபுக்கு இணங்க செயற்பட அதிகாரம் வழங்கப்பட்ட, சந்தர்ப்பம் ஒன்றில், அதனால் பாதிக்கப்பட்ட பகுதியினருக்கு கருத்துக்களைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்காது பதிவாளரிளால் அவ் தற்றுணீபு அதிகாரம் நேர்மையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

கடித வழுக்களைத் திருத்துதல்.

37. இந் நியதிச்சட்டத்தின்கீழ் பதிவாளரினால் பேணப்படும் ஏதாவது ஒரு பதிவு செய்யும் சான்றிதழ் ஒன்றில் அல்லது அறிக்கை ஆவணங்களின் ஏதாவது ஒரு பதிவு செய்யும் குறிப்பொன்றில் காலத்திற்குக் காலம் அறியும் ஏதாவது கடிதத்தில் உள்ள தவறினை தேவையென பதிவாளரினால் கருதப்படும் பரிசோதனையின் கீழ் அவரினால் திருத்தம் செய்ய இயலும்.

பதிவாளருக்கு எதிராக வழக்கினைத் தொடர முடியாது என்பது.

38. இந் நியதிச் சட்டத்தின் விடயங்களுக்காக நேர்மையாக மேற்கொள்ளப்பட்டது அல்லது செய்யப்பட்டது எனக் கருதப்படும் ஒவ்வொரு செயற்பாடு தொடர்பாகவும் பதிவாளருக்கு எதிராக வழக்கு ஒன்று அல்லது வேறு சட்டரீதியான நடவடிக்கையொன்று எடுக்கப்படக் கூடாது.

பதிவாளரினால் சட்ட உத்தியோகத்தரின் பணிப்பை கடைப்பிடிக்க இயலும் என்பது.

39. இந் நியதிச்சட்ட ஏற்பாடுகளில் ஏதாவது ஒரு ஏற்பாடு ஒன்றை நிர்வகிக்கும்போது ஏதாவது சந்தேகம் ஒன்று அல்லது சிக்கல் ஒன்று தோன்றும் வேளையில், அவ் விடயம் தொடர்பான கட்டளையைப் பெற்றுக்கொள்ள பதிவாளரினால் சட்டமா அதிபரிடம் வேண்டுகோள் ஒன்றை விடுக்க இயலும்.

பதிவாளர் மற்றும் ஏனைய ஊழியர்கள் அரச உத்தியோகத்தர் என்பது.

40. பதிவாளர் அல்லது இந் நியதிச்சட்டத்தின் கீழ் அதன் கடமைகளை மேற்கொள்ளும் ஏதாவது ஆள் ஒருவர், அப் பதவியை வகிக்கும் வரை, தண்டனைக் கோவை பிரமாணங்களின் பொருள் கொள்ளலுக்கு இணங்க அரச உத்தியோகத்தர்களாகக் கருதப்பட வேண்டும்.

அறிக்கைகள், ஆவணங்களைப் பேணிச் செல்லல்.

41. இந் நியதிச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் பேணுவதற்கு மற்றும் நடாத்திச் செல்வதற்கு பணிக்கப்பட்ட எல்லா அறிக்கை ஆவணங்களும் பதிவாளரின் மேற்பார்வையின் கீழ், பதிவுக் காரியாலயத்தில் வைத்துக் கொள்வது மற்றும் பேணிச் செல்வது இடம்பெற வேண்டும்.

இடைக்கால ஏற்பாடுகள்.

42. 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க மேல் மாகாண வியாபாரப் பெயர்கள் பதிவு செய்யும் நியதிச்சட்டம் இங்கு இல்லாதொழிக்கப்பட்ட போதும் :-

(1) அந் நியதிச்சட்டத்தின் மூலம் ஒன்று சேர்க்கப்பட்ட இலங்கை பாராளுமன்றத்தினால் அமுல்படுத்தப்பட்ட (149 அதிகாரமான) வியாபார பெயர்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 9 ஆவது பிரிவின் பொருள்கொள்ளலை தட்டிக் கழிக்கும் ஆட்களுக்கு எதிராக அமுல்படுத்தப்பட்ட கட்டளைக்கு அவர்கள் தொடர்ந்தும் உட்பட்டாக வேண்டியதுடன் அப் பிரிவின் ஏற்பாடுகளில் வழங்கி உள்ள சலுகைகளைப் பெற உரித்துடையவர்களாகவும் வேண்டும்.

(2) அந் நியதிச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட எல்லாப் பதிவுச் சான்றிதழ்களும் இந் நியதிச்சட்ட ஏற்பாடுகளின் கீழ் தொடர்ச்சியாக செல்லுபடியுள்ள மற்றும் செயற்பாடு உள்ளவையாக இருக்க வேண்டும்.

(3) அந் நியதிச்சட்டத்தினால் இயற்றப்பட்டு உரிய தினத்தில் இருந்து அதிகாரத்தில் உள்ள ஒவ்வொரு விதியும் அல்லது மேற்கொள்ளப்பட்ட கட்டளை ஒன்றும் இந் நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்காதவிடத்து தொடர்ந்தும் அவ் விதி அல்லது கட்டளை இந் நியதிச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட கட்டளை ஒன்றாகக் கருதப்பட வேண்டியதுடன், அதை இந் நியதிச்சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட விதியின் மூலம் திருத்துவது அல்லது இல்லாதொழிப்பதை மேற்கொள்ள இயலும்.

(4) அந் நியதிச்சட்டத்தின்கீழ் வழங்குவதற்குத் தேவையான எல்லா விபரங்களும் உள்ளடங்கிய ஒவ்வொரு தகவல் ஒன்றும் இல்லாது ஒழிக்கப்பட்ட நியதிச்சட்டத்தின் கீழ் பதிவாளருக்கு உரிய தினத்திற்கு முன் சமர்ப்பிக்கப்பட்ட ஏதாவது விபரங்களில் மாற்றங்கள் தொடர்பான ஒவ்வொரு தகவல்களும் செல்லுபடியானதும் மற்றும் அதிகாரம் உடையவையாகவும் வேண்டியதுடன், விபரங்களை வழங்குதல், விபரங்களின் மாற்றம், உரிய கட்டணங்களைச் செலுத்துதல், பதிவு செய்தல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல் தொடர்பாக அம்சங்கள் இந் நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கு இணங்க அந்த ஒவ்வொரு தகவல்களுக்குமாக உரியதாக வேண்டும்.

(5) அந் நியதிச்சட்டத்தின்கீழ் வைக்கப்பட்டுள்ள ஏதாவது அறிக்கை ஆவணம் ஒன்று, இந் நியதிச்சட்டத்தின்கீழ் வைக்கப்பட்ட அறிக்கைக்கு ஆவணம் ஒன்றாக மற்றும் அவற்றின் பகுதியொன்றாகக் கருதப்பட வேண்டும்.

(6) அந் நியதிச்சட்டத்தின்கீழ் ஏதாவது ஒரு நீதிமன்றம் ஒன்று குறித்த தினமொன்றுக்கு முன்னரான தினத்தில் தீர்ப்புக்கு உட்பட்ட எல்லாச் சட்ட ஆவணங்களும் அந் நியதிச்சட்ட ஏற்பாடுகளனின் கீழ் விசாரிக்கப்பட வேண்டியதுடன் அதன்கீழ் பொருள் கொள்ளப்பட வேண்டும்.

*43*. இந்நியதிச்சட்டத்தின் சொற்கள் தொடர்பாக பொருள் கொள்ளல் ஒன்று தேவைப்பட்டால் ஒழிய, — பொருள் கொள்ளல்.

"உசிதமான மாவட்ட நீதிமன்றம்" என்பது பிரதான வியாபார நிலையம் அமைந்து இருப்பது ஏதாவது மாவட்ட நீதிமன்ற அதிகார பிரதேசத்திலாயின் அம் மாவட்ட நீதிமன்றம் என்ற கருத்தாகும்.

"வியாபாரம்" என்பது ஏதாவது வாணிபம் ஒன்று, தொழில் ஒன்று, சேவையொன்று என்பது உள்ளடக்கப்படுகின்றது.

"வியாபார பெயர்" என்பது பங்கு வியாபாரமாக, அல்லது வேறு முறையில் ஏதாவது வியாபாரம் ஒன்றை நடாத்திச் செல்லும் ஏதாவது பெயர் ஒன்று அல்லது இலட்சணையின் கீழேயாயின் அப்பெயர் அல்லது இலட்சணை என்ற கருத்தாவதுடன், விலாசமும் அதற்குள் உள்ளடங்கும்.

"கூட்டுத்தாபனம்" என்பது ஏதாவது எழுத்துமூலமான சட்டமொன்றின்கீழ் அல்லது அதன்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனம் ஒன்று என்ற கருத்தாவதுடன், கூட்டுத்தாபனங்களுக்கு உரிய சட்டத்தில் பொருள் கொள்ளப்பட்டுள்ள கூட்டுத்தாபனம் ஒன்று அதற்கு உட்பட்டதாகும்.

"பணிப்பாளர்" மற்றும் "செயலாளர்" என்பது ஏதாவது ஒரு பெயரொன்றின் கீழ் அழைக்கப்படும், பணிப்பாளரின் அல்லது செயலாளரின் பதவியை வகிக்கும் ஏதாவது நபர் ஒருவர் என்பதாகும்.

"வியாபார தாபனம்" என்பது இலாபத்தினை நோக்காகக் கொண்டு வியாபார நடவடிக்கையை மேற்கொண்டு செல்லும் நோக்கில் ஒவ்வொருவரிடையே பங்கு வியாபாரமாக ஒன்று சேர்ந்த இரு ஆட்கள் அல்லது அதைவிடக் கூடிய எண்ணிக்கை மற்றும் கூட்டுத்தாபனம் ஒன்று அல்லது அதைவிடக்கூடிய எண்ணிக்கை அல்லது இரண்டு கூட்டுத்தாபனங்கள் அல்லு அறவிடககூடிய எண்ணிக்கையினைக் கொண்ட கூட்டுத்தாபனமொன்றாகாத சபை ஒன்று என்ற கருத்தாகும்.

"முழுப்பெயர்" என்பது முதலெழுத்தைக் குறிக்கும் பெயர் அல்லது வேறு இறுதிப் பெயர் ஒன்று முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ள மற்றும் முதலெழுத்து குறிக்கும் பெயர் முழுமையாக அல்லது அந்தந்த பெயர்களின் முதல் எழுத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பம் ஒன்று என்பதாகும்.

"ஆட்கள்" என்பது மனிதர்கள் என்ற கருத்தாகும்.

"உரிய" என்பது இந் நியதிச்சட்டத்திற்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட விதிகளின்மூலம் உரியதாக்கப்பட்டது என்ற கருத்தாகும்.

"பதிவாளர்" என்பது மேல் மாகாண வியாபார பெயர்கள் பதிவாளர் என்ற கருத்தாகும்.

"அமைச்சர்" என்பது மேல் மாகாண வர்த்தக விடயப் பொறுப்பு அமைச்சர் என்ற கருத்தாகும்.

"அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்" என்பது பிரதேச செயலாளர் அல்லது அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட வேறு உத்தியோகத்தர் ஒருவர் என்ற கருத்தாகும்.

"உரிய தினம்" என்பது இந்த நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் தினம் என்ற கருத்தாகும்.

*44*. இந் நியதிச்சட்டத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்படும்பொழுது அவ்வேளையில் சிங்கள மொழியிலுள்ள சொற்களே வலுப்பெற வேண்டும். — ஒவ்வாமை ஏற்படும் இடத்து சிங்கள மொழி சொற்களே அதிகாரம்பெற வேண்டும் என்பது.

*10- 129*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

3 - PG 001388